விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 23 வியாழக்கிழமை (06.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

யாழ்.நகர்ப் பகுதியில்

## முகக் கவசம் அணியாத பலர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 30 பேர் 19

கொடிகாமம் சந்தைக் கொத்தணியில்

## பொலிஸார், பிரதேச செயலக உத்தியோகத்தர் வியாபாரிகள் உட்பட 18 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தை கொரோனாக் கொத்தணியில் பொலிஸார், தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர், சந்தை வியாபாரிகள் உட்பட 18 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 101 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு சாவகச்சேரி சுகாதார அதிகாரி பிரிவில் மேலும் 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகா 19

கொரோனா தீவிரமடைந்தால்

# மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமாயின் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் நிலையேற்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில்,

கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை மேலும் தீவிரமாக அதிகரிக்குமாயின் பயணக் கட்டுப்பாடு 19

## கிளிநொச்சியில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரத்தில் 37 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு ஊழியராகப் பணிபுரியும் குறித்த நபர் வீட்டில் 19

தீக்காயத்துக்குள்ளான

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)

மந்திகையில் தீக்காயத்துக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரி 19

## வவுனியாவில் மேலும் ஐவருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த மேலும் 5 பேருக்கு கொரோ 19

## யாழ்.பல்கலைக்கழக பெண் விரிவுரையாளருக்கு

கொரோனாத் தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பெண் விரிவுரையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 19

கொரோனாத் தாக்கத்தால்

## இலங்கையில் முதலாவது கர்ப்பிணி உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கர்ப்பிணிப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் கொரோனாவால் நாட்டில் உயிரிழந்த முதலாவது கர்ப்பிணிப் பெண் 19

வவுனியா நகர சபை

## சுகாதாரப் பரிசோதகருக்கும் கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியா நகர சபை சுகாதார பரிசோதகருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றாளர்களின் 19

## யாழ்ப்பாணத்தில் 30 பேர் உட்பட வடக்கில் 45 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 30 பேர் உட்பட வட மாகாணத்தில் 45 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் 721 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தில் 30 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 9 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள் 19

## கொரோனாவின் தீவிரத்தை இலங்கை உணர வேண்டும்

உலக சுகாதார அமைப்பு

/07ஆம் பக்கம் பார்க்க

இலங்கையில் கொரோனா உச்சம்

## வீட்டில் திடீரென மரணமான மூன்று பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா மரணங்கள் உலகளவில் ஏற்படுத்திவரும் அவலமான நிலை இலங்கைக்குள் மெல்ல எட்டிப்பார்க்கத் தொடங்கியுள்ளதன் வெளிப்பாடாக வீடுகளில் திடீரென உயிரிழந்த 19

இலங்கையை உலுக்கும் கொரோனா

## +1,939 தொற்றாளர்கள் +11 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோய்த் தொற்றால் நேற்று ஒரே நாளில் ஆயிரத்து 939 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 19

### சுகாதார நடைமுறையை கடைப்பிடியுங்கள்

# தவறும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவீர்கள்

### யாழ். வர்த்தகர்களுக்கு சுகாதார பிரிவு அறிவிப்பு

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் வேகமாக அதிகரித்து வருகின்ற நிலையில் நாட்டின் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு யாழ்.வர்த்தகர்களுக்கு சுகாதாரத்துறையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவீர்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- கடையின் முற்பகுதியில் தொற்று நீக்கித் திரவம் அல்லது கைகழுவும் வசதியினை ஏற்படுத்திக் கொள்ளல்.
- கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தொற்று நீக்கம் செய்யாமல், முகக் கவசம் அணியாமல் வருபவர்களை எக்காரணம் கொண்டும் கடையினுள் அனுமதிக்க வேண்டாம்.
- கட்டாயமாக கடையின் உரிமையாளர், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
- கடையின் பணியாளர்கள் எவருக்கேனும் காய்ச்சல், இருமல், தொண்டை நோவு இருக்குமானால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவும்.
- பொருட்கள் கொள்வனவிற்காக வரும் மக்களை வர்த்தக நிலையங்களில் அதிக நேரம் தாமதப்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- அத்துடன் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் அதிகளவில் கூட்டமாக உட்பிரவேசிக்காமலும், சமூக இடைவெளியைப் பேணியும், சுகாதார நடைமுறைகளைப்பின்பற்றுவதையும்கருத்தில் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை பின்பற்றத் தவறும் பட்சத்தில் வர்த்தகர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனச் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ம-03,18,33)

# 7 ஆயிரம் ஒட்சிசன் சிலிண்டர்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை

### சுகாதார அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் அதிகளவானோருக்கு ஒட்சிசன் வழங்கும் தேவையும் எழுந்திருக்கின்றது. இந்நிலையில் 7 ஆயிரம் ஒட்சிசன் சிலிண்டர்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மருத்துவமனைகளில் தற்போது 24ஆயிரம் மருத்துவ ஒட்சிசன் சிலிண்டர்களும் 4 ஆயிரம் பெரிய சிலிண்டர்களும் உள்ளன. தற்போதைய நிலையில் ஒட்சிசன் பற்றாக்குறை இல்லை. எனினும் ஒட்சிசனை சேமிக்க போதிய சிலிண்டர்கள் இல்லாமையே பிரச்சினை எனவும் சுகாதார அமைச்சர் கூறினார்.

இந்நிலையில் 7 ஆயிரம் பாரிய சிலிண்டர்களை பெற்று ஒட்சிசனை சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வார இறுதிக்குள் இவற்றில் 400 சிலிண்டர்கள் நாட்டுக்கு வருவதை எதிர்பார்க்கிறோம் எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் உள்ள அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான அளவு ஒட்சிசன் 25 தொன்னாக உள்ளது. தேவையேற்படின் அத்தொகை 80 தொன் வரை அதிகரிக்கும் திறன் எங்களிடம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ம-03)

# இந்தியாவை விட இலங்கையில் தொற்று விகிதம் அதிகம்

### பொது சுகாதார பரிசோதகர் சங்கம்

(கொழும்பு)

இந்தியாவை விட இலங்கையில் கொவிட் தொற்றுறுதியாகின்றவர்களின் விகிதம் அதிகம் என்று பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைக் கூறியுள்ளா[illegible]

இலங்கையில் தற்போது நாளாந்தம் 1500க்கும் அதிகமான கோவிட்-19 நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

இந்தியாவில் நாளாந்தம் 3 இலட்சம் அளவிலானோர் கோவிட்-19 தொற்றுக்கு உள்ளாகின்ற போதும், இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் இலங்கையின் மக்கள் தொகை என்பவற்றை ஒப்பிடும்போது, இலங்கையில் கோவிட் தொற்றுக்கு ஆளாகின்றவர்களின் விகிதம் அதிகமாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கோவிட் நோயாளர்களுக்கான சிகிச்சையளிப்பதற்கான கட்டில்களுக்கு எதிர்காலத்தில் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தற்போது வைத்தியசாலைகளின் கொள்ளளவைக் காட்டிலும், அதிகளவான எண்ணிக்கையில் கொவிட் நோயாளர்கள் இருக்கின்றனர்.

இது எதிர்காலத்தில் பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தும் என்றும் பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகிந்த பாலசூரிய எச்சரித்துள்ளார். (ம-03)

# கனடாவில் கொரோனா தடுப்பூசி போட்ட பெண்

### இரத்த உறைவால் மரணம்

கனடாவில்அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட பெண் ஒருவர், இரத்த உறைவு ஏற்பட்டு மரண மாகியுள்ளார். அல்பேட்டா மாகாணத்திலேயே இந்த மரணம் பதிவாகியுள்ளது.

கனடாவில் இதுவரை அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியைப் போட்டுக் கொண்ட ஐந்து பேருக்கு இரத்த உறைவு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அல்பேட்டாவில் இதுவரை இரண்டரை இலட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ள போதும், ஒருவர் மாத்திரமே உயிரிழந்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக இராதாகிருஷ்ணன் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம்வலயக்கல்விப் பணிப்பாளராக முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் நேற்றுப் பதவியேற்றுள்ளார்.

இவர் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக முன்னர் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)

# யாழ். கொடிகாமத்தில் புகையிரதங்கள் நிறுத்தப்படாது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமத்தில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இரு கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் எந்தவொரு புகையிரதமும் கொடிகாமம் புகையிரத நிலையத்தில் நிறுத்தப்படாது என புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

பயணிகள் சாவகச்சேரி புகையிரத நிலையத்தை பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டையில் இருந்து (மு.ப 11.50) கடுகதி புகையிரதத்தில் பயணம் செய்யும் பயணிகள் பளை அல்லது யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இறங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

### திருகோணமலையில்

# பிரதேச செயலர், மாவட்ட செயலக அதிகாரிக்கு கொரோனா

(கொழும்பு)

திருகோணமலை பிரதேச செயலர் மற்றும் மாவட்ட செயலக அதிகாரி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மாவட்ட செயலர் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை பிரதேச செயலாளருக்கும், மாவட்ட செயலகத்தின் நிர்வாக அதிகாரி ஒருவருக்கும் கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, திருகோணமலை மாவட்ட செயலாளரும் தற்போது சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் சபைத் தலைவராக பிரதமர் மகிந்த தெரிவு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் சபையின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவாகியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 54ஆவது கூட்டம் நேற்று (புதன்கிழமை) மெய்நிகர் வழியாக நடைபெற்றது.

இதன்போதே, 2021 / 2022 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் சபையின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜோர்ஜியாவின் திபிலிசியில் முதலில் நடத்தத் திட்டமிடப்பட்ட வருடாந்த கூட்டம் தற்போதைய கொரோனா தொற்றுநோயால் மெய்நிகர் வடிவத்தில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் சபையின் 55 ஆவது ஆண்டுக் கூட்டம் அடுத்த ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# இந்தியர்கள் தொடர்பில் விழிப்புடன் இருங்கள்



## அரசாங்க அதிபர்

(நல்லூர்)

**இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிக்கும் நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளதால், வடக்கு மாகாண மக்கள் அவதானமாக இருக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.**

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் கொரோனா நிலைமை சற்று அதிகரித்த நிலைமை காணப்படுகின்றது. கடந்த வாரங்களில் இது குறைவடைந்த போக்கை காட்டியது. இருந்த போதிலும் நேற்று முன்தினத்தில் 37 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர் 1643 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

19 இறப்பு கடந்த வாரம் வரை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் 968 குடும்பங்களைச் சேர்ந்த 1995 நபர்களை சுயதனிமைப்படுத்தியுள்ளோம். நேற்று முன்தினம் மாலையில் கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனையின்படி கொடிகாமம் நகரப் பகுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனையடுத்து கொடிகாமம் சந்தைப் பகுதி, அதனுடன் இணைந்த கடைத் தொகுதி அத்தோடு இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி ஆகிய இரண்டும் நேற்றுக் காலை தொடக்கம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் அநேகமாக தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து வீடுகளிலிருந்து செயற்படும்படி நாங்கள் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். அவசியமற்ற ஒன்றுகூடல்கள், பயணங்களை தவிர்த்து, நிகழ்வுகளை தவிர்த்து வீடுகளிலிருந்து செயற்படுதல் மிகவும் சிறந்ததாகும். அது ஒரு பாதுகாப்பாகவும் காணப்படும். இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ் நாட்டில் தொற்று நிலைமை அதிகரித்துள்ள நிலையில் மக்கள் கடல் கடந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்குரிய நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 11 படகுகள் கைப்பற்றப்பட்டதாக அறிய முடிகின்றது. மேலும் இந்த நடவடிக்கை குறித்து ஆழ்கடல் மீனவர்களுக்கும் அதேபோல மீன்பிடி சமூகத்தினருக்கும் கரையோரப் பகுதியில் உள்ள பொது மக்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்காணிப்பு செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளோம். எமது மாவட்டத்தை பாதுகாக்க உதவுங்கள் என அரசாங்க அதிபர் தெரிவித்தார். (நி-4-33)

## நயினாதீவில் வெசாக் கொண்டாட்டம்; உடன் நிறுத்தவும் – கஜேந்திரகுமார் எம்.பி.

(யாழ்ப்பாணம்)



கொரோனாத் தொற்று அதிகரிக்கும் இந்நிலையில் நயினாதீவில் வெசாக் கொண்டாட்டங்களை நடத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சமய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கிறது. இவ்வகையில் நாச்சிமார் கோவில் தலைவரையும் செயலாளரையும் கைது செய்திருக்கிறது. இதுதான் நிலைமையெனின் நயினாதீவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்களை அங்கு நடத்த முடியாது. நாட்டிலுள்ள பாரதூரமான நிலைமைகளை கவனத்திற் கொண்டு இவற்றை நிறுத்துமாறு கோருகிறேன்.

நயினாதீவில் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டத்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்ட போது அதனை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்போதுள்ள பாரதூரமான நிலைமையைக் கவனத்திற் கொண்டு அதனை நிறுத்துமாறு கோருகிறேன். அவ்வாறு செய்தால் தேவையற்ற வகையில் இன முரண் பாடுகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியும். இவ்விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ளும் என நான் எதிர்பார்க் கிறேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

## ஆறு இலட்சம் தடுப்பூசிகள் பற்றாக்குறை மறைக்க எதுவுமில்லை என்கின்றார் சுதர்ஷினி

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது கட்டத்திற்கு ஆறு இலட்சம் தடுப்பூசிகள் பற்றாக் குறையாக உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் "ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறுகையில்,

இந்த விடயத்தில் எம்மிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை. இது விடயத்தில் அரசாங்கத்திடம் எவ்வித தவறும் இல்லை. நாங்கள் குறித்த நேரத்தில் இந்திய சீரம் நிறுவனத்திடம் கொள்வனவுக்கான கட்டளையை வழங்கியிருந்தோம். எனினும் அந்த நிறுவனத்தால் அவற்றை வழங்க முடியாமற் போயுள்ளது. இந்த தாமதத்திற்கு எதிர்பாராதவிதமாக இந்தியாவில் பரவிய கொவிட் தொற்றே காரணமாகும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## றிசாத் பாராளுமன்றம் வர அனுமதிக்காதீர்கள்-சரத் வீரசேகர

(கொழும்பு)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிசாத் பதியுதீனை பாராளுமன்றிற்கு வருவதற்கு அனுமதிக்க வேண்டாம் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கோரியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று அவர் இந்தக் கோரிக்கையை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் முன் வைத்துள்ளார்.

றிசாத் பதியுதீன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே பாராளுமன்றில் வந்து உரையாற்றுவதற்கு அனுமதிப்பது பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயகத்திற்குள் மறைந்து கொண்டு வெளியிடும் கருத்துக்கள் எதிர்காலத்தில் இந்த சம்பவம் தொடர்பில் கைதாக உள்ளவர்கள் தப்பிச் செல்லக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தேசியப் பாதுகாப்பு தொடர்பிலான ஓர் விடயம் என்பதனால் றிசாத்தை பாராளுமன்றம் வர அனுமதிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றிற்கு வருவதற்கு அனுமதிக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)


## மரண அறிவித்தல்

### அமரர்.புஸ்பராஜா தவமணிதேவி



பிறப்பு-01.08.1960 இறப்பு- 03.05.2021

யாழ்ப்பாணம் கலைவாணி வீதி சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராஜா தவமணிதேவி அவர்கள் 03.05.2021 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா இராசம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பூதர் மீனாட்சி தம்பதியரின் மருமகளும், புஸ்பராஜா அவர்களின் மனைவியும், ரதிவதனி அவர்களின் சகோதரியும், கஷாகரன், சுகன்யா, றதீப், றம்மியா ஆகியோரின் தாயாரும், ஜெயராட், லோஜினி, பரணியா, திலீபன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (06.05.2021) இன்று வியாழக்கிழமை 10.30 மணி தொடக்கம் 12.30 வரை (சுவிஸ் நேரம்) நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன்-றதீப் (அஜித்-சுவிஸ்) (6807)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரரர் வெற்றிக்கிண்ணம் - 2021

## புள்ளிப்பட்டியலில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி முன்னிலை



ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக, யாழ். சென்றல் வியைாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ். நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு 11.03.2021 தொடக்கம் 31.03 வரை நடைபெற்ற 14 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 4 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற் றியும், ஒரு போட்டியில் தோல் வியும் அடைந்து 25.84 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி 3 இலும் வெற்றி பெற்று 19.70 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் ஓல்ட்கோல்ஸ் அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டியில் வெற்றியும் 2 போட்டியில் தோல்வியுமடைந்து 16.88 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் யாழ். ஜொனியன்ஸ் அணி 2 போட் டியில் பங்கு பற்றி ஒரு போட்டி யில் வெற்றியுடம் ஒரு போட்டி யில் தோல்வியுடம் அடைந்து 10.42 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும் கே.சி.சி.சி. அணி 3 போட்டியில் பங்கு பற்றி 2 போட்டியில் வெற்றியுடம் ஒரு போட்டியில் தோல்வியுமடைந்து 9.56 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலும் சென்றலை ட்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அப்போட்டியில் வெற்றி பெற்று 8.08 புள்ளி களைப் பெற்று 6 ஆம் இடத்தி லும் யூனியன்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அப் போட்டியில் வெற்றி பெற்று 6.40 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும் விக்ரோறி அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அப்போட்டியில் வெற்றி பெற்று 8 ஆம் இடத்திலும் ஹாட்லியையிற்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 5.83 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்திலும் AB அணி 2 போட்டியில் பங்கு பற்றி 2 இலும் தோல்வியடைந்து 5.34 புள்ளிகளைப் பெற்று 10 ஆம் இடத்திலும் விக்ரோறியன்ஸ் அணி 2 போட்டியில் பங்கு பற்றி 2 இலும் தோல்வியடைந்து 4 புள்ளிகளைப் பெற்று 11 ஆம் இடத்திலும் பற்றீசியன்ஸ் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அதில் தோல்வியடைந்து 3.29 புள்ளிகளைப் பெற்று 12 ஆம் இடத்திலும், நியூஸ்ரார் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அதில் தோல்வியடைந்து 2.44 புள்ளி களைப பெற்று 13 ஆம் இடத்திலும் றெஜின்போ அணி ஒரு போட்டியில் பங்கு புற்றி அதில் தோல்வியடைந்து 2.34 புள்ளிகளைப் பெற்று 14 ஆம் இடத்திலும், டிறைற்றோன் அணி ஒரு போட்டியில் பங்கு பற்றி அதில் தோல்வியடைந்து 2.21 புள்ளி களைப் பெற்று 15 ஆம் இடத்திலும் உள்ளனர். (4-6)

## சீ.ரி.ஏ.கால்பந்து போட்டி இன்டர்மிலன் முதலிடம்



இத்தாலியில் பிரபலமான சீ.ரி.ஏ. கால்பந்து லீக் போட்டி நடந்து வருகிறது. 20 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் கடந்த திங்கட் கிழமை நடந்த அடலாண்டா சாசு ஓலோ இடையிலான லீக் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்ததன் மூலம் இன்டர்மிலன் அணி (34 ஆட்டத்தில் 25 வெற்றி, 7 சமநிலை, 2 தோல்வியுடன் 82 புள்ளி) முதலிடத்தை பிடித்து கோப்பையை வெல்வது உறுதியாகி இருக்கிறது.

இன்னும் 4 லீக் ஆட்டங்கள் எஞ்சியுள்ள நிலையில் இன்டர்மிலன் அணி 11 ஆண்டுகளுக்கு பிறகு இந்த கோப்பையை வசப்படுத்துகிறது.

இதன் மூலம் யுவென்டஸ் அணியின் 9 ஆண்டுகால ஆதிக்கம் முடிவுக்கு வருகிறது. (4-6)

## உலகின் மிக வயதான நபர் ஒலிம்பிக் சுடர் ஓட்டத்திலிருந்து விலகல்

உலகின் மிக வயதான நபரான 118 வயதுடைய ஜப்பானைச் சேர்ந்த மூதாட்டி கொவிட்-19 அச்சங்கள் காரணமாக 2021 டோக்கியோ ஒலிம்பிக் சுடர் ஓட்டத்தில் பங்கெடுப்பதை தவிர்த்துள்ளதாக அவரது மருத்துவர்கள் குழு நேற்று தெரிவித்துள்ளது.

கின்னஸ் உலக சாதனை பெற்ற கேன் தனகா, மே 11 ஆம் திகதி ஃபுகுயோகாவில் தொடங்கும் ஒலிம்பிக் சுடர் ஓட்டத்தில் பங்குகொள்ளும் ஒருவராக நியமிக்கப்பாட்டார்.

எனினும் தற்சமயம் நிலவும் கொவிட்-19 அச்சம் காரணமாக அவரது குடும்பத்தாரின் ஆலோசனைக்கு அமைவாக கேன் தனகா ஒலிம்பிக் சுடர் ஓட்டத்தில் பங்குகொள்ளாமல் விலகவுள்ளதாக மருத்துவர்கள் குழுவினர் கூறியுள்ளனர்.

மார்ச் மாதத்தில் ஆரம்பமான 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்கான சுடர் ஓட்டம் கொரோனா வைரஸ் பரவலினால் பாதிக்கப்பட்டுள்ளது. சுடர் ஓட்டத்தில் பங்கேற்கவிருந்த சில பிரபலங்கள் தொற்று நோய்க்கு மத்தியில் பாதுகாப்பு காரணங்களுக்காக விலகியுள்ளனர்.



தொற்று நோய்களின் மீள் எழுச்சியைக் கட்டுப்படுத்த டோக்கியோ மற்றும் ஓசாகாவிற்கு கொவிட்-19 அவசரகால நிலையை ஜப்பான் கடந்த மாதம் அறிவித்தது.

இந்த அவரசகால நிலை விரிவாக்கத்தை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக யோமியூரி செய்தித்தாள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. (4-6)

## நிறுத்தப்பட்ட ஐ.பி.எல். செப்டெம்பரில்?

கடந்த ஆண்டுக்கான 13-வது ஐ.பி.எல். போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள டுபாய், அபுதாபி, ஷார்ஜா ஆகிய நகரங்களில் செப்டெம்பர் முதல் நவம்பர் மாதம் வரை நடந்தது.

14-வது ஐ.பி.எல். போட்டி இந்தியாவில்தான் நடத்தப்படும் என்று கிரிக்கெட் வாரியம் திட்டவட்டமாக அறிவித்தது.

அதன்படி கடந்த மாதம் 9 ஆம் திகதி இந்த போட்டி தொடங்கி கொரோனா பரவல் காரணமாக ரசிகர்கள் இல்லாமல் 6 நகரங்களில் மட்டுமே இந்த போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஏற்கனவே 5 வீரர்கள் போட்டியில் பாதியில் இருந்து விலகினார்கள்.

அதைத் தொடர்ந்து மேலும் வீரர்களுக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டதால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கிரிக்கெட் வாரியமும் ஐ.பி. எல். ஆட்சி மன்றக் குழுவும் முடிவு செய்து ஐ.பி.எல். போட்டியை காலவரையறையின்றி ஒத்திவைத்தது.

ஐ.பி.எல். போட்டியை பாதியிலேயே ஒத்திவைத்ததால் கிரிக்கெட் வாரியத்திற்கு ரூபா 2 ஆயிரம் கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது பாதியில் ரத்து செய்யப்பட்டதால் 31 ஆட்டங்களுக்கான பணத்தில் ரூ.1,700 கோடி இழப்பு ஏற்படுகிறது. இது தவிர டைட்டில் ஸ்பொன்சர் மற்றும் இதர ஸ்பொன்சர்கள் மூலமும் கிரிக்கெட் வாரியம் வருவாயை இழக்கிறது.

இதற்கிடையே பாதியில் ஒத்திவைக்கப்பட்ட எஞ்சிய ஐ.பி.எல். ஆட்டங்களை செப்டெம்பர் மாதத்தில் நடத்த கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது. (4-6)

# அரச சேவையில் உச்சம் கண்டவர் வே.சிவஞானசோதி



## மறைந்தார் மாண்பு

புன்னகை பூத்த முகம், யாரும் அணுகக்கூடிய சுபாவம், கூர்ந்து கிரகிக்கும் திறன், அமைதியாக அரவணைத்துப் பேசும்பக்குவம் போன்ற உயர் குணங்களைக் கொண்டவரும் மக்கள் சேவையே தனது அரச பணியின் பிரதான கடமை என வாழ்ந்தவருமான உயர் அரச அதிகாரி வே.சிவஞானசோதி கடந்த மாதம் ஐந்தாம் திகதி இவ்வுலகை விட்டு நீத்துவிட்டார் என்ற செய்தி இந்நாட்டை ஒரு கணம் நிலைகுலைய வைத்தது.

அரச பணிகளில் மிகச் சிறந்த ஆளுமையாக இனம், மதம், கட்சி போன்ற பேதங்களைக் கடந்து விளங்கினார். இலங்கைத் திட்டமிடல் சேவையில் தனது அரச சேவையை ஆரம்பித்து, பணிப்பாளராகி, பணிப்பாளர் நாயகமாகி, அமைச்சரவை அந்தஸ்துள்ள செயலாளராகி, நிறைவாக சிரேஷ்ட செயலாளராகி தனது அரச பணியினை நிறைவு செய்தார். இந்தப் பயணத்தில் அவருடைய சிறந்த செயற்றிறனின் பயனாக இந்நாட்டு மக்கள் பல அரச திட்டங்களின் பலன்களை அனுபவிக்கும் பேற்றைப் பெற்றார்கள்.

முக்கியமாக, நாடு தழுவிய ரீதியில் கம்பெரலிய - துரித கிராமிய அபிவிருத்தித் திட்டம், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பிந்தங்கிய பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள், சிறிய, நடுத்தர கைத்தொழில் மேம்பாட்டுத் திட்டம், கைத்தொழில்ப் பேட்டைகள் அபிவிருத்தித் திட்டம் போன்ற பல அரச திட்டங்களை செவ்வனே அமைச்சரவையில் உரிய அங்கீகாரங்களை நேரம் தவறாது பெற்று, அந்தந்த அரச அதிகாரிகள் மூலமாக, விரைவாக மக்களுக்கு கிடைக்க இரவு-பகலாக அயராது சேவையாற்றினார்.

அவருடைய உண்மையான உழைப்பும், நப்பார்ந்த பேச்சும், அரவணைத்துச்செல்லும் சுபாவமும் மற்றைய அரச அதிகாரிகளுக்கு அவரோடு சேர்ந்து பணியாற்றவும், மேற்கூறிய திட்டங்களை திட்டமிட்டவாறே செயற்படுத்தவும் பெரும் துணையாகவும், ஊக்கமாகவும் இருந்ததாக அவரின் இரங் கல் உரைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மிகப் பெரியதும், கடுமையானதுமான பல திட்டங்களை தன் தனிப்பட்ட திறமையால் நிறைவேற்றிய பெருமை அன்னாரைச்சாரும்.

அவர் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்.பரியோவான் மற்றும் யாழ்.இந்துக் கல்லூரிகளிலும் நிறைவாக உயர் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். உயர் கல்வியை நிறைவு செய்யும் போது சி.எல்.விக்கிரமசிங்க ஞாபகார்த்த விருதையும் சேர்.சுசந்த பி.பொன்சேகா ஞாபகார்த்த விருதையும் சிறந்த கல்வித் தகைமைகளுக்காகப் பெற்றுக் கொண்டார்.

மேலும், கொழும்பு பல்கலைக்கழகம், பிராட்பொர்ட் (**Bradford**) பல்கலைக்கழகம் பிரித்தானியா, ஹவார்ட் (Harvard) பல்கலைக்கழகம் ஐக்கிய அமெரிக்க இராச்சியம், ஒட்டாவா கார்ல்ட்டன் (**Ottawa Carlton**) பல்கலைக்கழகம் கனடா போன்றவற்றில் தனது மேற்படிப்பையும், துறைசார் பயிற்சிகளையும் பெற்றுக்கொண்ட அவர், தனியார் துறையைத் தேர்ந்தெடுக்காமல் இந்நாட்டு மக்களுக்கு தான் பணி செய்ய வேண்டுமென்ற அவாவினால் அரச பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

போரினால் நாட்டு மக்கள் அடைந்த அவலம் அவரால் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகவே இருந்தது. முக்கியமாக வடகிழக்கு மக்களின் இடர் நிறைந்த அன்றாட வாழ்க்கை நிலைமையை மாற்ற வேண்டுமென்ற பேரவாவினால் அமைச்சரவையிலும், மக்களவையிலும், மாகாண சபைகளிலும், பிரதேச சபைகளிலும் பல திட்டங்களை நிறைவு செய்வதற்காக இரவு-பகல் என்று பார்க்காமல் தனது இறுதி மூச்சுவரை செயலாற்றி நிறைவேற்றினார் என்றால் மிகையாகாது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டம், இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்றத்திட்டம், இராணுவ சேவைக்காக எடுக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடம் கையளிக்கும் திட்டம், கண்ணிவெடியகற்றல் திட்டம் மற்றும் பல்வேறு கல்வி, சுகாதார, மருத்துவ, தரை ஆகாய போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு, வழிபாட்டுத் தலங்கள் மேம்பாடு, பனைவள அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி போன்ற அத்தியாவசியத் திட்டங்களை மிகத்துரிதமாக பல்வேறு அரசாங்கங்களின் அனுசரணையுடன் அமுல்படுத்த அயராது பணியாற்றினார்.

அது மாத்திரமல்ல, தனிப்பட்ட மனித வாழ்வு மேம்பட வேண்டும் என்ற எண்ணக் கருவோடு உருவாக்கப்பட்ட உதவித் திட்டங்கள் பலவற்றை மக்களுக்கு கிடைக்க வழிசமைத்தார். உதாரணமாக, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உதவித்திட்டம், மாற்றுத்திறனாளிகள் உதவித்திட்டம், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்ட குடும்ப உதவித்திட்டம், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான உதவித்திட்டம், பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புத் திட்டம், தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற வாழ்வாதாரத் திட்டங்களை முன்னின்று நிறைவேற்றியுள்ளார்.

அன்னாரின் சேவைகள் கடல் கடந்தும் பல சபைகளிலும், கருத்தரங்குகளிலும் பரந்துள்ளது. ஐக்கிய நாடுகள் (UN) சபையின் இருக்கைகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றில் முதன்மைப் பேச்சாளராகவும், ஆலோசகராகவும், இலங்கை அரசாங்கம் சார்பாக பங்குபற்றியுள்ளார். சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிதி வழங்கும் நாடுகளின் ஆதரவோடு நிறுவப்பட்ட செயலணியின் (**Evaluation of Implementation of Paris Declaration on Aid Effectiveness**) இணைத் தலைவராகவும் இருந்து, இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார். அவருடைய கண்ணிவெடி அகற்றல் திட்டத்தின் முன்னேற்றத்தையும் பெறுபேறு களையும் கேட்ட சபை 2021 இல் இலங்கையை கண்ணிவெடியற்ற நாடாக பிரகடனப்படுத்தும் பட்டியலில் இணைத்துக் கொண்டது.

அன்னாரின் சேவையின் திறம் கண்டு, பொதுநலவாய கணக்காளர் மற்றும் தேசிய முகாமைத்துவ கணக்காளர்களின் சர்வதேச மகாநாட்டில் அவருக்கு "உயர் தொழில்சார் அதிசிறப்பு விருது" (**Professional Excellence Award – 2019**) வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அதேபோல், இலங்கை கம்பன் கழகத்தினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்புச் செய்தமைக்காகவும், பல்வேறு தேசிய ரீதியான அபிவிருத்தித் திட்டங்களைச் சிறப்பாக அமுல்படுத்தியமைக்காகவும் "சான்றோருக்கான விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்வாறாக தன் இறுதி மூச்சு வரை இந்நாடும், இந்நாட்டு மக்களும் சிறப்பாக இருக்க வேண்டும், வாழ வேண்டும் என்று அயராது உழைத்து மறைந்த வே. சிவ ஞானசோதி வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது உறுதி.

எஸ்.ஏ. ரஞ்சன்

# மரண அறிவித்தல்



## அமரர்.பிரான்சிஸ் சேவியர் நீக்கிலஸ்

**பிறப்பு: 1941.12.02 இறப்பு: 2021.04.19**

யாழ்ப்பாணம் 5ம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் நீக்கிலஸ் அவர்கள் 19-04-2021 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஜோண் நீக்கிலஸ் தங்கமொறா நீக்கிலஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் மரியாம்பிள்ளை மேரிபுஸ்பம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன் பற்றிமாதேவி (செல்வமகள்) அவர்களின் அருமைக் கணவரும், ஜென்சன் (பிரான்ஸ்), சுமித்திரா சியாந்தி (ஜேன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெஸ்லி அருள்ராஜசிங்கம், குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பிறெட்றிக் நீக்கிலஸ், யூடித் ராஜரெட்ணம், மெற்றில்டா பிச்சைத்தம்பி (கனடா), காலஞ்சென்ற அல்பேட் ஜெறோம் நீக்கிலஸ், கியூபேட் நீக்கிலஸ் கொறட்டி திசவீரசிங்கி, டெலினி நீக்கிலஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், போதகர் அன்ரன் ஜீவா (நோர்வே), ராணி, வதனி (நோர்வே), பாபுஜி (ரவி-ஜேர்மனி), ராஜன், ரஞ்சன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்ரன் செல்வராஜா, காலஞ்சென்ற அருள் ஞானமலர் ஆகியோரின் அன்புச் சகலனும், தேவறஞ்சினி, யூலி, சூட்டி, விஜயா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனோஷி, சேரா, ஜெறிஷா, மியூலின் டாஷா, கொட்பிறி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 07.05.2021 நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இல.122, 3 ம் குறுக்கு வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக இராச வீதி கோப்பாயில் உள்ள கானான் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: செல்வமகள் - மனைவி: +94779 407341
ஜென்சன் - மகன்: +33613345377
ஜேன் - மகள், மருமகன்: +447805419243
ராணி செல்வராஜா - மைத்துனி: +94755433526
அன்ரன் செல்வராஜா - மைத்துனர்: 0756634269

தகவல்: குடும்பத்தினர்

(6784)

# றிசாத் பாராளுமன்றம் வருவதில் சட்ட சிக்கல் எதுவுமில்லை

## சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லை என சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளரின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் சட்டமா அதிபர் இந்த அறிவிப்பை மேற்கொண்டதாக சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி தெரிவித்தார்.(நி-4)

**கல் தொழிற்சாலை நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை**

இயந்திரம் மூலம் கல் அறுக்க, தூண் அறுக்கவும் ஆட்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொலைபேசி இல: 077 916 8739

(6803)

# இணுவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியை
செல்வி.து.தமயந்தி
அவர்களின் தந்தையார்
அமரர்.
**வைத்திலிங்கம் துரைராசா**
அவர்கள் 02.05.2021 அன்று
சிவபதமடைந்த செய்தி கேட்டு
துயரடைவதுடன் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(6806)

# யாழ். நகர் மத்தியில் விழிப்புணர்வு செயற்பாடு



(நல்லூர்)

யாழ். நகரின் மத்தியில் நேற்று கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவின் வழிகாட்டுதலில் யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸார், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களின் பங்குபற்றுதலுடன் குறித்த கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம், தனியார் பேருந்து தரிப்பிடம், முச்சக்கரவண்டி தரிப்பிடம் மற்றும் ஏனைய இடங்களில் இந்த கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முகக்கவசம் அணியாதோர் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதோடு, பொதுப் போக்குவரத்து மற்றும் வெளி மாவட்ட பேருந்து சேவையில் ஈடுபடுவோருக்கும் தற்கால சூழலில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பான பூரண விளக்கமளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(5-4-33)

# க.பொ.த.(உ/த) பெறுபேறில் வாழ்வக மாணவி சாதனை



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் தங்கியிருந்து கல்வி பயிலும் செல்வி ஜெயராசன் லோகேஸ்வரி (முற்றாகப் பார்வையற்றவர்.)

இவர் கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையிலே 2ஏ பி பெறுபேறு பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளார். தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு ஏ பெறுபேறு, அரசறிவியல் பாடத்துக்கு பி பெறுபேறும் பெற்று மாவட்ட ரீதியாக 38ஆவது இடத்தினையும் பெற்றுள்ளார். (5-4)

# மாகாணக் கல்வித் திணைக்களத்தின் "e" கற்றல் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்குரிய அழகியல், சமூக விஞ்ஞானம் மற்றும் சுகாதாரமும் உடற்கல்வி பாடங்களுக்கான இலத்திரனியல் கற்றல் மென் பொருட்கள் வடமாகாணத்தின் **Lmdm you tube** தளத்தில் தொடர்ச்சியாக தரவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

கொவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக வீட்டிலிருக்கும் மாணவர்கள் அவற்றினைப் பார்வையிட்டு பயன் பெறுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாடத்திட்டத்திற்கமைய பூரணப்படுத்தப்படும் மேற்படி பாடங்களின் இறுவெட்டுக்கள் விரைவில் மாகாணத்தின் அவ்வப் பாடப் பொறுப்பாளர்களினால் பிரதி ஒன்றுவீதம் பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள் அதனை பிரதி செய்து உரிய சுகாதார நியமங்களைப் பின்பற்றி மாணவர்களின் சுயகற்றலுக்கு அவற்றை வழங்கமுடியும் எனவும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார். (5-4)




# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் சுன்னாகம் மயிலணி திருக்குட்வாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. சோ.சந்திரசேகரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.

(5-4)

# சீட்டிழுப்பு வெல்லப்பட்டுள்ளது

(குப்பிழான்)

மஹாஜன சம்பத சீட்டிழுப்பில் யாழ். சுதுமலையைச் சேர்ந்த நபர் ஒருவரினால் 20 இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.

சங்கானை நகரத்தில் விற்பனையில் ஈடுபட்டு வரும் முகவர் ஒருவரால் விற்பனை செய்யப்பட்ட மஹாஜன சம்பத ரிக்கெட் மூலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை குறித்த தொகை வெல்லப்பட்டுள்ளது.

(5-4-18)

# க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**யாழ்/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

கணிதப்பிரிவு

எஸ்.பிரணவன்-3ஏ, ஜி. கிருஷாந்த்-3ஏ, ஆர்.துஷாரகன்- 3ஏ. ஜே. ஹரிஸ்மேனன்-3ஏ, பி. நவநீதன்-3ஏ, பி. கேதாரகன்-3ஏ, பி.கிஷோகரன்-2ஏபி, எஸ். குகநிஷாந்தன்-2ஏபி, கே.கனிஸ்ரன்-2ஏபி, ரி.அபிஷாந்த்- 2ஏபி, ஆர். தனுஷன்- 2ஏபி, ஜி. துவாரகன்-ஏ2பி, பி.துஷிகரன்- ஏ2பி

உயிரியல் பிரிவு

எஸ்.ஆரணன்- 3ஏ, வை. மதுஷனன்-3ஏ, எஸ். நிதுர்ஷன்- 2ஏபி, எஸ். நிருதாசன்-2ஏபி, எஸ். ரமணன்- 2ஏபி, ஜே. தருஷன்-2ஏபி, எஸ். பிரியவர்ணன்-ஏ2பி, எஸ். துவாரகன்-2ஏபி, ஜே. ஜெனோஷன்- ஏ2பி, ஆர். பிரதீப்-3பி

வர்த்தகப் பிரிவு

எஸ்.பவித்திரன்-3ஏ,எஸ். லக்சன்-3பி

பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு

வி.மதிவர்மன்- 2ஏபி, எஸ்.கஜிந்தன்-ஏ2பி

**யா/ வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி**

உயிரியல் பிரிவு

வி.யுவஸ்திகா-3ஏ, பி. ஜிந்துகா- 2ஏ.பி, எம்.சங் கவி-2ஏபி, பி.யதுகிரி- 2ஏபி. (60)

கணிதப்பிரிவு

வி. யதீஸ்வர்யா-3ஏ, ரி.யவுதமி-3பி.

வர்த்தகப் பிரிவு

ரி. தம்பூரணி-ஏ,2பி

கலைப்பிரிவு

எஸ்.ஜெயனி- 3 ஏ, எஸ். புவிநிலா-2ஏபி, எல். அபிரா-ஏ2பி, எஸ். கஜனா- ஏ,2பி. பி.ஜீவரோகினி-3பி, எஸ். பிரியங்கா-ஏ2பி

**யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

பௌதீக விஞ்ஞானப் பிரிவு

ஏ. பற்றிக் நிலக்ஷன்- 3ஏ (ஆங்கிலமொழி மூலம்), ஏ.றுக்ஷான்-3ஏ, ரி.சஜீவன்-2ஏபி (ஆங்கில மொழி மூலம்), எப்.யூட். டினோசன்-2ஏபி, என். சாம்சன்-ஏ2பி

கலைப்பிரிவு

ஏ.வினோஜன்- 3ஏ, எப். எட்வின்ராஜ்-2ஏபி, ஏ.எம். சஞ்ஜீவன்-2ஏபி, சி.குகேந்திரன்-2ஏசி, எம். மரிய நிக்ஷன்-ஏ2பி

வர்த்தகப் பிரிவு

ஜே.பி.விதுசன்-2ஏசி

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

ஏ.அன்ரன் அஜித்குமார்-ஏ2பி

உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு

ஆர்.சாதுஜன் -ஏ2பி, பி.ஜோன் கிறிஸ்ரோபர்- ஏ2பி

**யாழ். நடேஸ்வராக் கல்லூரி**

கலைப்பிரிவு

ஞா.சத்தியா-2ஏபி

**யாழ். இணுவில் மத்திய கல்லூரி**

வர்த்தகப்பிரிவு

ப.கஜழினி-2ஏபி

கலைப்பிரிவு

சி.வைஷ்ணவி-ஏ2பி, உ.அஜிந்தா-ஏ2பி

**யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி**

கணிதப்பிரிவு

ஆர்.அக்ஷியா-3ஏ, பி.சாதுர்ஜா-2ஏபி, ஆர்.அபிராம்-2ஏபி

உயிரியில் பிரிவு

எஸ்.சசீபன்- 3ஏ (ஆங்கில மொழி மூலம்)

வர்த்தகப்பிரிவு

எஸ்.கோபிகா-3ஏ

கலைப்பிரிவு

ஆர்.டிலக்ஷன்-2ஏசி, ஆர். கௌசிகா-2ஏசி, ஜே.யதுஷன்-ஏ2சி, பி.ஆர்த்திகன்-3பி

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

பி.விதுர்ஷன்-2ஏபி(60-90)

**யாழ். வட்டு. மத்திய கல்லூரி**

வர்த்தகப் பிரிவு

ஜெ.ஜெயதாசன்-3ஏ

கலைப்பிரிவு

ஜெ.பிரித்திகா-2ஏபி, இ.கிதுசன்-2ஏசி

# கொரோனா வைரஸின் தீவிரத்தை இலங்கை உணர வேண்டும்

## உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தல்

(கொழும்பு)

**கொரோனா வைரஸின் மிக அண்மைய எழுச்சியைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறு இலங்கையர்களை உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.**

உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகத்துக்கான பொறுப்பதிகாரி டாக்டர் ஒலிவியா நிவேரஸ் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

தற்போதைய நிலை மிகவும் சவால் நிறைந்ததாக இருக்கலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

World Health Organization

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ள டாக்டர் ஒலிவியா நிவேரஸ்,

இலங்கையில் தொற்று நோயைக் கட்டுப்படுத்த முன்னணிசுகாதாரப் பணியாளர்கள், அரசு மற்றும் சுகாதார அமைச்சு அயராது உழைத்து வருவதாகத் தெரிவித்தார்.

தீவிரமாக அதிகரித்துவரும் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்தவும் உயிர்களைக் காப்பாற்றவும் இலங்கைக்கு உதவ உலக சுகாதார அமைப்பும் ஐக்கிய நாடுகள் சபையும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ்தொற்று நோயைக் கட்டுப்படுத்த தனியே சுகாதாரப் பணியாளர்கள், பாதுகாப்புப் படைகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளால் மட்டும் முடியாது. அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

நெரிசலான இடங்களில் ஒன்றுகூடுவதை தவிர்க்க வேண்டும். குறைந்த இடவசதி கொண்ட மற்றும் மூடிய இடங்களில் இருப்பதை தவிர்க்க வேண்டும். தனிநபர்களுக்கு இடையே நெருங்கிய தொடர்புகளைத் தவிர்க்க வேண்டும். இவையே தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில் அல்லது தொற்று நோயில் இருந்து தப்பிக் கொள்வதில் முக்கிய பங்காற்றுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமூக இடைவெளியை பராமரித்தல், கைகளை அடிக்கடி கழுவுதல், மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்தல் மற்றும் முகக் கவசம் அணிதல் என்பவையும் தொற்று நோயில் இருந்து தப்ப முக்கிய விடயங்களாக உள்ளன.

எம்மையும் எங்கள் குடும்பத்தினர் மற்றும் எங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாக்க இந்தப் பரிந்துரைகளை பின்பற்ற வேண்டும். நாம் ஒவ்வொருவரும் எங்கள் பங்களிப்பை சரியாகச் செய்தால் இந்த நெருக்கடியில் இருந்து மீண்டுவர முடியும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகம் எதிர் கொண்டுள்ள மிகவும் சவாலான நெருக்கடி இந்த தொற்று நோயாகும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 10 செவ் 4 சூரி 3 இல்<br>தகைமை/தொழில்: பனை, தென்னை அபிவிருத்தி சபை<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்/வீடுடன் பெண்<br>தொ.இ: **B/11855** | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 57 3/4 செவ் 1 சூரி 9 இல் உயரம்: **162cm**<br>தகைமை/தொழில்: அரச ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா, லண்டன்)<br>தொ.இ: **G/11877** |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: - செவ் 12 சூரி 6 இல்<br>தகைமை/தொழில்: **O/L,** தனியார் நிறுவன முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த கொழும்பில் உள்ள பெண் விரும்பத்தக்கது<br>தொ.இ: **B/11859** | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:- செவ் 4 சூரி 5இல்<br>தகைமை/தொழில்: **B.Com,** கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை **DO**<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மாப்பிள்ளை, மணமகன் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: **G/11880** |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: - செவ் 9 சூரி 5 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: **A/L,** தனியார் நிறுவனத்தில் வேலை<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: **B/11861** | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 2 செவ் 4 சூரி 10 இல் உயரம்: **164cm**<br>தகைமை/தொழில்: **A/L,** தனியார் ஆங்கில ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, தனியார் அரச தொழில்<br>தொ.இ: **G/11882** |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 11 3/4 செவ் 3 சூரி 1 இல் உயரம்: **175cm**<br>தகைமை/தொழில்: **B.A, MSc,** அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் படித்த பெண்<br>தொ.இ: **B/11862** | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 39 செவ் 2 சூரி 4 ல் உயரம்:5<br>தகைமை/தொழில்: **NAITA, Hotel Management, IT Certificate**<br>எதிர்பார்ப்பு: உள்ளூர் எனின் அரச உத்தியோகம், வெளிநாடு எனின் பிரான்ஸ், ஜேர்மன்<br>தொ.இ: **G/11886** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532



# MEDICNE ENGINEERING

(China, Bangladesh & Malaysia)

- University of Science & Technology Chittagong (Bangladesh)
- Zhengzhou University (China)
- Quest University (Malaysia)

IVS

(643)

Institute of Vocational Studies (Pvt) Ltd.
Since: 1992 (29 Years Trusted Services)
No. 476. Kandy Road, Dalugama, Kelaniya.
Telephone: 0777 444 500 / 0112 969 435
E-mail : ivsltd@hotmail.com Web : www.ivsedu.net

# பூசணிக்காயை சந்தைப்படுத்த ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டம் கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் சந்தைப்படுத்த முடியாமல் தேங்கியிருந்த சுமார் 75,000 கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்துள்ளது.**

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் ஒருங்கிணைப்புக்குழுவின் சக இணைத்தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸுடன் பேசி இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி, முதற்கட்டமாக 50,000 கிலோகிராம் பூசணிக்காயை கொழும்பு மனிங் சந்தைக்கு எடுத்துச் செல்ல வடக்கு மாகாண ஆளுநர் ஏற்பாடு செய்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் இந்தப் பூசணிக்காயை கொழும் புக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைத் தற்போது மேற்கொண்டு வருகிறது.

கண்ணகைபுரம் பகுதிக்கு நேரில் சென்ற மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன், பூசணிக்காயை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக விவசாயிகளுடன் கலந்துரையாடி அனைத்து விவசாயிகளுக்கும் நன்மை பயக்கக் கூடிய வகையில் பூசணிக்காயை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தார்.

இதற்கு மேலதிகமாக முப்படையினருக்குமான உணவுப்பொருள் கொள்வனவில் ஈடுபடும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கும் ஒரு தொகுதி பூசணிக்காயை விற்பனை செய்வது தொடர்பாகவும் கோ.றுஷாங்கன் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

நேரடியாக பூசணிக்காயைச் சந்தைப்படுத்துவதற்கு மேலதிகமாக, பூசணிக்காயை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர் உற்பத்திகளைத் தயாரிக்கும் சிறுகைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அந்தப் பகுதி இளைஞர் மற்றும் மகளிர் விவசாய அமைப்புக்களுடனும் அவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார். (5-4-350)

# யானைகள் அட்டகாசத்தால் பயன்தரு மரங்கள் சேதம்



(முறிகண்டி)


கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் காட்டு யானைகளால் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் இவ்வாறு தமது வாழ்வாதாரப் பயிர்களை அழித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை அப்பகுதியில் உள்ள சுமார் 20 குடும்பங்கள் யானையின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளதுடன், யானை மீண்டும் தமது பிரதேசத்திற்குள் நுழைந்துவிடும் என்ற அச்சத்திலும் உள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் கவனம் செலுத்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்தித் தருமாறும், நட்டஈட்டினைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.(5-4-100-316)

# வவு.தெற்கு பிரதேச சபைக்கு புதிய தவிசாளர் தெரிவு

(நெளுக்குளம்)



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய தவிசாளராக கூட்டமைப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் யோகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர்கள் தமது பதவியினை இராஜினாமா செய்திருந்தனர். அந்த வகையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளர் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், வவுனியா தெற்கு பிரதேச சபையின் புதிய தவிசாளருக்கான தேர்தல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

குறித்த தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு சார்பில் ஜனொப்டின் த.யோகராஜாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. வேறு கட்சிகளை சார்ந்தவர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்படவில்லை. இந்நிலையில் யோகராஜா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். (5-4-299)

# முடக்கப்பட்டது குருக்கள் புதுக்குளம்

(நெளுக்குளம்)

குருக்கள் புதுக்குளம் பகுதியில் கடந்த வாரம் இரண்டு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த இருவருடனும் தொடர்புகளைப் பேணிய 100 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன் கிராமத்தில் தொற்று நீக்கல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

அதனையடுத்து குறித்த பகுதி நேற்றுக் காலையிலிருந்து முடக்கப்படுவதாக கொவிட் தடுப்பு செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.. (5-4-299)

# காணிக்கிளை சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தின் காணிக்கிளையின் சேவைகள் அனைத்தும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் கொவிட்-19 தொற்று பரவலடைந்து வருகிறது. அதனைக் கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகள் மாவட்ட நிர்வாகங்களால் விதிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கொவிட்-19 தொற்று பரவல்நிலை காரணமாக வவுனியா பிரதேச செயலகத்தின் காணிக்கிளையின் அனைத்து சேவைகளும் நேற்றிலிருந்து எதிர்வரும் 19 ஆம் திகதிவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்துள்ளார். (5-4-299)

# சிவில் உடையில் வந்தால் உடன் அழைக்கவும்

(நெளுக்குளம்)



சிவில் உடையில் புலனாய்வாளர் எனத் தெரிவித்து விசாரணை செய்ய முனையும் நபர்களை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம் என வவுனியா பொலிஸார் அறிவித்துள்ளனர். வவுனியா மற்றும் வடக்கின் பல பகுதிகளில் தங்களை அரச புலனாய்வாளர் எனக்கூறிக்கொண்டு, வீடுகளில் சோதனை என்ற பெயரில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இச்சம்பவங்கள் தொடர்பாக, வவுனியா பொலிஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

தங்களை அரச புலனாய்வாளர்கள் அல்லது பொலிஸார் எனக் கூறிக்கொண்டு வீடுகளுக்கு விசாரணை என்ற பெயரில் வரும் நபர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.


அத்துடன் பொலிஸ் சீருடை இல்லாமல் விசாரணை என்ற பெயரில் வருபவர்களை, வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம் எனவும் வவுனியா பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அவ்வாறு விசாரணை என்ற பெயரில் சிவில் உடையில் வரும் சந்தேகத்திற்கிடமான நபர்கள் குறித்து தங்களுக்கு அறிவிக்குமாறு கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களையும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான நபர்கள் தொடர்பாக உடனடியாக, 024 222 2222, 024 222 2226, 071 859 1343, 072 997 7302, 071 471 6286 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வவுனியா பொலிஸார் பொதுமக்களை கோரியுள்ளனர்.

(5-4-299)

# 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 22 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (5-4-316)

## இராசிபலன்

06.05.2021
சித்திரை 23, வியாழக்கிழமை
தசமி மாலை 6.13 மணிவரை
சதயம் பிற்பகல் 2.24 மணிவரை
சுபநேரம் 7.26-8.56 மணிவரை
இராகுகாலம் 1.26-2.26 மணிவரை
சந்திராஷ்டமம்: பூசம், ஆயிலியம்
திருநாவுக்கரசர் குருபூசை வளவன்


**மேஷம்**: தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.


**ரிஷபம்**: வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரசு வழிச்சலுகைகள் எதிர்பார்த்தபடியே கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**மிதுனம்**: எதிலும் அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.


**கடகம்**: உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து வேறு பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.


**சிம்மம்**: சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


**கன்னி**: குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய் தொழிலில் மதிப்பும் உயர்வும் கிடைக்கும், உடல் நலம் சீராகும்.


**துலாம்**: புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


**விருச்சிகம்**: வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.


**தனுசு**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.


**மகரம்**: தொழிலில் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.


**கும்பம்**: மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


**மீனம்**: பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

குற்றவாளி பிறரையும் குற்றவாளி எனக் கருதுவான்

# கொவிட் பயங்கரவாதம் அல்ல அது ஒரு கொள்ளை நோய்

## எதிர்கொள்ளும் முறையை கண்டறிய வேண்டும்



(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகின்ற நிலையில் அரசாங்கம் உண்மைகளை மூடி மறைப்பதாகவும் இந்த நிலை தொடர்ந்தால் எதிர்வரும் காலங்கள் மோசமானதாக அமையும் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

தற்போது மக்கள் இறப்பதை பார்க்கும்போது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எமது மக்கள் கொத்துக்கொத்தாக இறந்தமையே நினைவுக்கு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். கொவிட்-19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் குறித்த நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கொவிட் என்பது ஒரு பயங்கரவாதம் அல்ல, அது ஒரு கொள்ளை நோய், இதனை எதிர்கொள்ளும் வழி முறை என்ன என்பதை கண்டறிய வேண்டியதே முக்கியமானதாகும்.

கொவிட் வைரஸ் தாக்கத்தில் பல்வேறு மக்கள் இறந்து போயுள்ளனர். இந்த இறப்புகள் குறித்து உண்மைகள் வெளிவருவதில்லை. இலங்கையில் கொவிட் -19 வைரஸை கட்டுப்படுத்தும் விதம் பாராட்டத்தக்கதாக இருந்தாலும், வடக்கு-கிழக்கில் இதன் நிலைமைகள் மாறாகவே உள்ளன. இலங்கையில் முதல் முதலில் வடக்கு-கிழக்கில் கொவிட் தனிமைப்படுத்தல் நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இராணுவத்தின் வசமே இவை அனைத்தும் உள்ளன. ஆனால் இந்த நிலையங்களில் நோயாளர்களின் நிலைமை மோசமானதாக உள்ளது. மூன்று வேளை சோறும் கருவாட்டுத்துண்டும் வழங்கப்படுகின்றது. எனவே இதனை சபை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு நாளைக்கு இரண்டாயிரம் அடையாளப்படுத்தக்கூடிய அளவிற்கும் கொவிட் வைரஸ் இந்த நாட்டில் தொற்றுகின்றது என்றால் இன்னும் எவ்வளவு தூரம் இதன் தாக்கம் ஏற்படப் போகின்றது என்ற அச்சம் உள்ளது. கொவிட் தடுப்பூசி ஏற்றல் கூட கேள்விக்குறியாக மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# கொரோனாவை கட்டுப்படுத்த புதிய சட்டம் அவசியம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாவினை கையாளும் வகையில் விசேட சட்ட ஏற்பட்டினை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"உலக நாடுகள் கொரோனாவை கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்டங்களை உருவாக்கியுள்ளன. கொரோனா சட்டமூலம், கொரோனா வைரஸ் சட்டமூலம் ஆகியவற்றை உருவாக்கியுள்ளன.

உதாரணத்திற்கு இத்தாலி, பிரித்தானியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளை உதாரணமாகக் கூறலாம். பாராளுமன்றம் சட்டமியற்றும் பணியினைக் கொண்டிருந்த போதிலும் இதுவரை கொரோனாவை தடுக்கும் வகையில் புதிய சட்டம் எதனையும் இயற்றவில்லை.

அண்மையில் நீதியமைச்சர் புதிய சட்டம் கொண்டவரப்படவுள்ளதாக அறிவித்திருந்தார். ஆனாலும் இதுவரையிலும் எந்த சட்டமூலமும் கொண்டுவரப்படவில்லை.



புதிய சட்டத்தினைக் கொண்டு வருமாறு மனித உரிமை ஆணையாளர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றினையும் எழுதியிருந்தார். ஆனாலும் இன்றுவரை புதிய சட்டம் இயற்றப்படவில்லை.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தத்தினை எதிர்கொள்ளும் வகையில் புதிய சட்டம் ஒன்று கட்டாயம் உருவாக்கப்படுதல் அவசியமாகின்றது" என சுமந்திரன் தெரிவித்தார். (நி-4)

# ஜனாதிபதி வழங்கிய உத்தரவு இரத்துச் செய்யப்பட வேண்டும்

(கொழும்பு)

கரைதுறைப்பற்றில் எட்டு கிராமங்களது காணி நிர்வாகத்தினை மகாவலியின் கீழ் கொண்டு செல்லுமாறு ஜனாதிபதி வழங்கிய உத்தரவை இரத்துச் செய்ய வேண்டும் என கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக இந்த நிலங்களைப் பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி, மகாவலி அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இவ்விடயத்தை ஆராய அமைக்கப்பட்ட செயற்குழுவின் நடவடிக்கை முற்றுப்பெறாத நிலையில் ஜனாதிபதி தன்னிச்சையாக எந்த முடிவினையும் எடுக்க முடியாது.

ஜனாதிபதியை தனது முடிவினை மீளாய்வு செய்யுமாறும் இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கொவிட் நிலைமைகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)




# கனவுகள் பலிக்கும்



மறுநாள் காலை மன்னன் தான் கண்ட கனவு பலித்ததை மந்திரிக்கும், சேனாதிபதிக்கும் விபரமாகக் கூறினான்.

அவர்கள் இருவருக்கும் மல்லப்பன் செய்த ஏமாற்று வேலை அது என்பது தெரிந்து விடடது. அதனால் அவர்கள் மன்னனிடம் எதுவும் பேசவில்லை. அவர்கள் சேனாதிபதியின் அறைக்குப் போய் மல்லப்பனை அங்கு வரவழைத்தனர். மந்திரி நயமாக மல்லப்பனைக் கேட்டும், அவன் உண்மையைச் சொல்லவில்லை.

ஆனால், சேனாதிபதி அவனை மிரட்டி, அடி அடி என அடித்த பிறகே மல்லப்பன் உண்மையைக் கக்கினான்.

மந்திரியும், "இந்த முறை உன்னை விட்டு விடுகிறேன். மறுபடியும் இந்த மாதிரி ஏதாவது தில்லு முல்லு செய் தால் கடுமையாக தண்டிப்பேன்," எனக் கூறி எச்சரித்து அனுப்பினான்.

மல்லப்பன் மந்திரியை பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் தன்னை அடித்த சேனாதிபதியைப்பழிக்குப்பழிவாங்க தீர்மானித்துக் கொண்டான். அதற்கான சந்தர்ப்பத்தை அவன் எதிர்பார்க்கலானான்.

ஒரு வாரத்திற்குப் பின் மன்னன் மந்திரியிடமும், சேனாதிபதியிடமும், "நான் நேற்று ஒரு கனவு கண்டேன். அதில் யாரோ ஒரு வீரன் என்னைக் குத்தியது போல இருந்தது.


அந்த வீரனின் முகம் சரியாகத் தெரியவில்லை. அந்த வீரன் யார் எனத் தெரிந்தால் பிடித்து, தண்டித்து விடலாம். ஆனால், அதற்குள் என் கனவுப்படி நடந்து விட்டால் என்ன செய்வது?" என்றான்.

அப்போது சற்று தூரத்தில் நின்ற மல்லப்பன் மன்னன்கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தான். சேனாதிபதியை ஒழிக்க அவன் உடனே திட்டம் போட்டான். அன்றிரவு ஒரு மந்திரவாதியை ஊர் மயானத்தில் காளி உபாசனை செய்யச் சொன்னான். மந்திரவாதியும் மண்டை ஓடு, எலும்புத் துண்டுகள், எலுமிச்சம் பழங்கள் எல்லாம் ஒரு கோலம் போட்டு வைத்து மந்திரத்தை ஜெபிக்கலானான்.

மல்லப்பன் மன்னனிடம் போய், "அரசே! தங்களைக் கொல்ல முயல்பவர் யாரென்று தெரிந்து விட்டது.

நம் சேனாதிபதி தான் நீங்கள் கனவில் கண்ட வீரன், நான் என் ஆடு ஒன்று காணாமல்போன தால் அதைத் தேடிக் கொண்டு மயானம் பக்கம் போனேன்.அப்போது நம் சேனாதிபதியும், ஒரு மந்திரவாதியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். (தொடரும்)

# மகாபாரதம்




பின் துரியோதனனும் சிறிது நேரமே போர் புரிந்தான். பின் தோற்று ஓடினான்.

துரியோதனா நில். நீ ஒரு வீரனா? உனக்கு மானம்இல்லையா? என அவன் மான உணர்ச்சியைத் தூண்டினான் பார்த்திபன்.

பின் மோகனாஸ்திரத்தால் அருச்சுனன் அனைவரையும் மயங்கச் செய்தான்.

பின் அருச்சுனன் பீஷ்மரைத் தவிர மற்றவர்கள் அணிந்திருந்த பட்டுத் துணிகளை கவர்ந்து வருமாறு உத்தரனிடம் கூறினான். அவனும் அவ்வாறே செய்தான்.

மோகனாஸ்திரத்தால் மயங்கி விழுந்தவர்கள், மயக்கம் தெளிந்து எழுந்தவர்கள் தோல்வியால் மனம் உடைந்தனர். வெட்கத்தோடு அஸ்தினாபுரம் திரும்பினர்.

வெற்றி வீரர்களாக விஜயனும் உத்தரனும் விராட நகரம் வந்தார்கள். வரும் வழியில் முன் பிருந்தபடியே ஆயுதங்களைஒளித்து வைத்தனர். அருச்சுனன் மீண்டும் பிருகன்னளையாகி தேர் ஓட்டிச் சென்றான்.

தென்திசையில் திரிகர்த்த மன்னன் சுசர்மாவைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடிய மன்னனை வரவேற்க விராட நகரம் தயாராகயிருந்தது.

அப்போதுதான் தன் மகன் உத்தரன் காணப்படாததைக் கண்டு விராட மன்னன் வினவ அவன் வடதிசையில் கௌரவர்களை எதிர்க்கச் சென்றுள்ளான் என்ற செய்தி கேட்டு மன்னன் திகைத்தான்.

"அங்கு மாவீரர்களான பீஷ்மர், துரோணர்,. கர்ணன் ஆகியோரை எப்படி என் மகன் வெல்வான்?" எனக் கவலையுற்றான்.

அப்போதுதான் மகனின் வெற்றிச் செய்தி மன்னனுக்கு எட்டியது. மிகச் சிறந்த வரவேற்புக்கு ஏற்பாடு செய்தான்.

(தொடரும்)

# 15.34 கோடியை தாண்டியது

## உலகளவிலான தொற்று எண்ணிக்கை

(ஜெனிவா)

**உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 15.34 கோடியை தாண்டியுள்ளது.**



இதன்படி, இதுவரை உலகம் முழுவதும் தற்போது 15 கோடியே 34 இலட்சத்து 78 ஆயிரத்து 525 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 13 கோடியே 7 இலட்சத்து 90 ஆயிரத்து 684 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 32 இலட்சத்து 16 ஆயிரத்து 128 பேர் உயிரிழந்துள்ளமை பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு தற்போது ஒரு கோடியே 94 இலட்சத்து 71 ஆயிரத்து 713 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஒட்சிசன் சிலிண்டர்கள் தமிழகம் வந்தடைந்தன





(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாம் அலை தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கொரோனாவால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் இறப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான படுக்கைகள் மற்றும் ஒட்சிசன் விநியோகத்தின் மீது மிகக் கடுமையான அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் ஏற்பட்டுள்ள இரண்டாவது அலை கொரோனா தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் உதவிட பல்வேறு நாடுகள் முன்வந்துள்ளன.

அந்த வகையில் லண்டனில் இருந்து இந்திய விமானப் படை சிறப்பு விமானம் மூலம் 46.6 லீற்றர் திறன் கொண்ட 450 ஒட்சிசன் சிலிண்டர்கள் நேற்று அதிகாலை தமிழகம் சென்றமைந்தன.

முன்னதாக குவைத்திலிருந்து 282 சிலிண்டர்கள், 60 ஒட்சிசன் செறிவூட்டிகள், வென்டிலேட்டர்கள் மற்றும் பிற மருத்துவப் பொருட்களைக் கொண்டு வந்த விமானம் ஒன்றும் நேற்றுக் காலை இந்தியா வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 3 ஆவது முறையாக முதல்வரானார் மம்தா



(டில்லி)

இந்தியாவில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி மேற்குவங்கத்தில் மூன்றாவது முறையாக நேற்று முதல்வராக பதவியேற்றுள்ளார்.

66 வயதான மம்தா பானர்ஜி மேற்கு வங்காளத்தில் மொத்தமுள்ள 292 தொகுதிகளில் 213 தொகுகளில் வெற்றி பெற்று வலுவான முதல்வராக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ளார்.

நேற்று நடந்த பதவியேற்பு விழாவில் 3 ஆவது முறையாக முதல்வராக மம்தா பானர்ஜி கம்பீரமாக பதவியேற்றார்.

கொல்கத்தாவில் உள்ள ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் அவர் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். (நி-4)

# சிங்கங்களையும் விட்டு வைக்காத கொரோனா தொற்று



(டில்லி)

இந்தியாவின் 2 ஆவது கட்ட கொரோனாத் தொற்று மக்களை வாட்டி வதைப்பதுடன் மிருகங்களையும் விட்டு வைக்கவில்லை. ஐதராபாத்தில் 8 சிங்கங்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்றின் 2 ஆவது அலை வீசி வருகிறது. கடந்த ஆண்டைவிட தற்போது, சூறாவளிபோன்று சுழன்று அடிக்கிறது. தற்போதைய நிலையில் இந்த சூறாவளிக்கு தினந்தோறும் இந்தியாவில் 3.5 இலட்சம்பேர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஒட்சிசன் இல்லாமலும், மருத்துவமனையில் படுக்கைகள் இல்லாமலும் தவித்து வருகிறார்கள். இந்த நிலையில் ஐதராபாத் நேரு உயிரியல் பூங்காவில் உள்ள மிருகங்களுக்கும் கொரோனாத் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது. அங்கு 8 ஆசிய சிங்கங்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிங்கங்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால், ஆர்.டி.-பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதனால் சிங்கங்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அதன் உடல்நிலை கண்காணிப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கொரோனா எதிரொலி விற்பனையின்றி தேங்கும் பூக்கள்



(டில்லி)

ஒசூர் மலர்ச்சந்தையில் கொரோனா வைரஸ் எதிரொலியாக மலர்களின் விற்பனை குறைந்து மலர்கள் தேக்கமடைந்துள்ளதால் விலையும் பல மடங்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மலர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-4)

# குழந்தைகளை வெட்டி கொலை செய்த இளைஞன்

## பிரேசிலில் வெறித்தனம்

(பிரஸெல்ஸ்)

பிரேசிலில் சிறுவர் பராமரிப்பு மையம் ஒன்றுக்குள் புகுந்த 18 வயது இளைஞன் அங்கிருந்து 3 குழந்தைகள் மற்றும் இரண்டு ஊழியர்களை வாளால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்துள்ளார்.

இந்தப் படுகொலைகளைத் தொடர்ந்து கழுத்தை அறுத்து தற்கொலை செய்துகொள்ள முயன்ற கொலையாளி ஆபத்தான நிலையில் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெற்கு பிரேசில் - சாண்டா கேடரினா மாநிலத்தில், சவுடேட்ஸ் என்ற சிறிய நகரத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு மையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையாளியின் நோக்கம் என்ன? என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த நேரத்தில் பல குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் இருந்தனர்.

தாக்குதலின்போது பல குழந்தைகளை அறைகளுக்குள் வைத்துப் பூட்டி ஊழியர்கள் காப்பாற்றியதாக அதிகாரி கள் தெரிவித்தனர். எனினும் கொலையாளியான இளைஞன் 3 குழந்தைகளையும் அவர்களைக் காப்பாற்ற முயன்ற இரண்டு ஊழியர்களையும் வெறித்தனமாக வெட்டிக் கொலை செய்துள்ளான். (நி-4)

# இனங்காணப்படும் தொற்றாளர்களைவிட சமூகத்தில் உள்ளவர்கள் அதிகம்

(கொழும்பு)

நாளொன்றுக்கு இரண்டாயிரத்தை அண்மிக்கும் வகையில் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமையானது வைத்தியசாலைகளில் துரிதமாக அவர்களை அனுமதிக்கும் செய்ற்பாடுகளை சிக்கலாக்கியுள்ளன.

அதனால் தற்போது கணிசமானளவு தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்படுகிறது. அவ்வாறானவர்கள் மிக அவதானத்துடன்செயற்பட வேண்டும் என்றும், குடும்பத்தில் தொற்றுக்கு உள்ளாகாத நபர்கள் காணப்பட்டால் அவர்களுடனான நெருங்கிய தொடர்புகளை சிறிது காலத்தில் முற்றாக தவிர்த்துக் கொள்வது இலகுவானதாகும் என்று தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

மேலும் நாளொன்றுக்கு ஆயிரத்து 800 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்படுவதிலிருந்து , அதனை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு எண்ணிக்கையிலான தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது மிகவும் அபாய நிலைமையாகும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கை வசதிகளை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா 3 ஆவது அலை அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அதனால் ஏற்படும் நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில் தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பரவலை கட்டுப்படுத்த சுகாதாரத் துறையும், ஜனாதிபதி செயலணியும் மிகவும் திட்டமிட்ட மற்றும் வலுவான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. மருத்துவமனை படுக்கைகளின் எண்ணிக்கையை 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். (நி-4)

# மேலும் 173 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 173 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

# 1000 மில்லியன் ரூபாவிற்கு என்ன நடந்தது?- மரிக்கார்



(கொழும்பு)

கொவிட் -19 இற்கு சேகரிக்கப்பட்ட பணம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து பாராளுமன்றத்துக்கோ அல்லது பொதுமக்களுக்கோ தெரிவிக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொவிட்-19 நிதிக்கு ரூபா ஆயிரம் மில்லியன் வசூலிக்கப்பட்டது. ஆனால் பாராளுமன்றத்துக்கோ அல்லது பொதுமக்களுக்கோ நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை.

தொற்றுநோயின் தொடக்கத்திலிருந்து, அரசாங்கம் அரசியல் ரீதியாக இயக்கப்படுகிறது என்றும், தொற்று நோயைச் சமாளிக்க ஒரு விவேகமான அணுகுமுறையை எடுக்கவில்லை. எனவே நாடு இப்போது ஒரு மோசமான சூழ்நிலையை எதிர்கொள்கிறது என்று மரிக்கார் தெரிவித்தார்.

இலங்கை அளவிலான ஒரு நாடான இஸ்ரேல், தடுப்பூசித் திட்டத்தை மேற்கொண்டு தொற்றுநோயை சமாளித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

“தேவையான தடுப்பூசியைப் பெறுவதன் மூலம் இதேபோன்ற அணுகுமுறையை பின்பற்ற நாங்கள் தவறிவிட்டோம். இதிலும் இலங்கை தோல்வியடைந்துள்ளது என்பதை இது காட்டுகிறது" என்றார்.

“இன்று அரசாங்கம் பணத்தை மோசடி செய்துள்ளது, பணம் இல்லாததால் உர இறக்குமதியை நிறுத்த அரசு முயற்சிக்கிறது " என்று அவர் மேலும் கூறினார்.

முதலில் அரசியல் நலன்களை எடுக்காமல் மருத்துவ நிபுணர்களைக் கேட்டு முடிவுகளை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2305

**வசந்தன்**

சில காகத்துக்கு கிடைக்கும் சோறுகூட பல ஏழைகளுக்கு கிடைப்பதில்லை




**அஜய்**

சேர முடியாது எனத் தெரிந்தும் காதலிப்பதுதான் உலகின் சிறந்த காதல்




**குமார்**

முதுகுக்குப் பின்னால் துரோகம் செய்துவிட்டு முன்னால் நின்று காப்பாற்றுவது போல் நடிக்கும் மோசமான மனிதர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்



**யனுதாஸ்**

டேய் பார்த்தா நியூஸ் பார்த்தியாடா என்னா உங்க அப்பா CM ஆயிட்டாரு அதானே



**விமல்**

மதிய நேரத்தில் நீண்டநேரம் தூங்குகிறீர்களா? ஆயுள் குறையலாம் என்கிறது முக்கிய ஆய்வு... இதுமட்டும் உண்மையா இருந்தா நாங்கெல்லாம் செத்து இந்நேரம் பத்து வருஷம் ஆகியிருக்கும்



**சுரேஷ்**

உன்னைக் குறை கூறும் பலருக்கு உத்தமனாக வாழ்வதைவிட உன்னை நம்பும் சிலருக்கு நல்லவனாய் இரு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்கள் இனியும் அலட்சியமாக செயற்படுவதை அனுமதிக்க முடியாது

## சவேந்திர சில்வா

(கொழும்பு)

**மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தற்போது பயணிக்கின்றோம் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும்.**

சுகாதார ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே அனைத்து செயற்பாடுகளும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் என கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.



திரிபுபடுத்தப்பட்ட வைரஸ் மிக வேகமாகப் பரவும் நிலையை காண முடிகிறது. விரைவாக வைரஸ் தொற்று நோயாளர்கள் அதிகரிக்கும் நிலையே காணப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் சுகாதாரத் துறையினர் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாலேயே நிலைமையைக் கட்டுப்படுத்த முடிகிறது. அதேபோன்று பாதுகாப்பு படையினர், பொலிஸார் உள்ளிட்டவர்களும் தம்மையும் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொண்டு நாட்டு மக்களையும் பாதுகாப்பதில் 24 மணித்தியாலங்களும் கடும் உழைப்பை மேற்கொள்கின்றனர்.

அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பை நாம் எளிதாகக் கருத முடியாது.

திருமண நிகழ்வுகளை தடை செய்துள்ள நிலையில் சிலர் வீடுகளில் விருந்துபசாரங்களை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இந்தக் காலம் அதற்கு பொருத்தமான காலம் அல்ல. மக்கள் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும்.

அவ்வாறான நிகழ்வுகளுக்கு இடமளிக்க முடியாது. சுகாதாரத்துறையினர் வெளியிட்டுள்ள வழிகாட்டல்கள் முறையாக பின்பற்றப்படுகிறதா? என்பது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இனியும் மக்கள் அலட்சியமாக செயற்பட இடமளிக்க முடியாது.

இக்கட்டான இந்த காலகட்டங்களில் எதையும் உதாசீனம் செய்யாது கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும் என சவேந்திர சில்வா தெரிவித்தார். (நி-4)

# மோசமடையும் தொற்று இரத்தத்திற்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று அதிகரித்து செல்வதன் காரணமாக தேசிய இரத்தமாற்ற சேவை கடும் நெருக்கடியில் உள்ளது என தேசிய இரத்தமாற்ற சேவையின் பணிப்பாளர் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், கொவிட் தொற்று நோய் மற்றும் இரத்த ஓட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இரத்ததானம் செய்பவர்களுக்கு பற்றாக்குறை இருப்பதாக தெரிவித்தார்.

தினமும் குறைந்தது 800 யுனிட் இரத்தம் பெறப்பட வேண்டும். தற்போது தினமும் பெறும் இரத்தத்தின் அளவு குறைந்துள்ளது. எதிர்காலத்தில் நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமானால் கடுமையான நெருக்கடி ஏற்படக்கூடும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, போதுமான இரத்த இருப்புக்களை கையிருப்பில் வைத்திருக்க இரத்ததானம் செய்யுமாறு அவர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார். (நி-4)

# தேர்தலுக்கு முகங்கொடுக்க தயார்- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

(கொழும்பு)

எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கு தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

அதன் சிரேஷ்ட உப தவிசாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச நேற்று முன்தினம் கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.

எவ்வாறாயினும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் எவையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் கடந்த தேர்தல் காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வாழ்க்கை ஒரு விளையாட்டு!

ஒரு ஜென் துறவி. அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது. கடைசிக் காலம். நண்பர்களை எல்லாம் கூப்பிட்டார். நண்பர்களே நான் வித்தியாசமான முறையில் சாக வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அதற்கு ஏதாவது யோசனை சொல்லுங்களேன் என்று கேட்டார். நண்பர்கள் சிரித்தார்கள்.

என்ன பேச்சு பேசுகின்றீர்கள். இறப்பது என்பது என்ன விளையாட்டுக் காரியமா? என்று கேட்டார்கள் அவர்கள். அந்தத் துறவி கொஞ்ச நேரம் யோசனை செய்தார். பின்பு கேட்டார்...இதுவரைக்கும் யாராவது நடந்து கொண்டே இறந்திருக்கின்றார்களா? என்றார். எல்லோரும் இல்லை என்றார்கள். ஒருத்தர் மட்டும் சொன்னார்...அப்படியும் ஒருத்தர் இறந்திருக்கின்றதாக ஒரு கதையில் படித்திருக்கின்றேன். ஒரு ஞானியாலே தான் அப்படியெல்லாம் செய்ய முடியும் என்று அவர் சொன்னாராம் என்றார்.

சரி அப்படி என்றால் அந்த முறை நமக்கு வேண்டாம். நின்று கொண்டே யாராவது உயிரை விட்டிருக்கின்றார்களா? என்று கேட்டார் துறவி.

அப்படியும் ஒருத்தர் இறந்திருக்கின்றார் என்றார்கள். மறுபடியும் துறவி யோசனை செய்தார்.

மனிதன் எப்படி வாழ்கிறானோ அப்படி இறப்பதுதான் நல்லது. சரி.. யாராவது தலைகீழாக, யோகம் செய்யும் நிலையில் இறந்திருக்கின்றார்களா? என்று கேட்டார். நண்பர்கள் சிரித்தார்கள்.

தலைகீழாக நின்றபடி இறந்ததாக நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை. அது முடியாத காரியம் என்றார்கள். இப்ப அந்தத் துறவிக்குத் திடீர் என்று உற்சாகம் வந்துவிட்டது. உடனே எழுந்தார். தலைகீழாக நின்றார். உயிரை விட்டார். அவ்வளவு தான்.

அந்த மடாலயத்தில் ஒரே குழப்பம்... எப்படி அவரைக் கீழே இறக்கி படுக்க வைப்பது என்று புரியவில்லை. இப்படி உயிர் விடுவதைப் பற்றி அவர்கள் இதுவரைக்கும் கேள்விப்பட்டதும் இல்லை. உண்மையிலேயே இவர் இறந்து தான் போனாரா? என்பதும் தெரியவில்லை. சோதித்துப் பார்த்தார்கள். இதயத் துடிப்பு, நாடித்துடிப்பு எல்லாம் நின்று போயிருந்தது.

இவர் எப்பவும் இப்படித்தான். என்ன செய்வது இப்பொழுது? என்று எல்லோரும் குழம்பிக் கொண்டு இருந்த சமயத்திலே ஒரு பெரியவர் யோசனை சொன்னார்.

இந்தத் துறவியினுடைய மூத்த சகோதரி பக்கத்து மடாலயத்திலே இருக்கிறார். அவரை இங்கே அழைத்துக் கொண்டு வந்தால் ஏதாவது வழி கிடைக்கும் என்றார்.

அந்த அம்மாவுக்கு 90 வயது. அழைத்துக் கொண்டு வந்தார்கள். தடியூன்றி நடந்து வந்தார். தம்பி தலைகீழா நின்று உயிர் விட்டு இருக்கிறதைப் பார்த்தார். தன் கைத்தடியாலே தம்பியின் உடலை ஒரு தட்டு தட்டிவிட்டு...சாகின்ற போதும் உன் குறும்புத் தனத்தை விடவில்லையா? இப்படியாடா சாவது? ஒழுங்கா செத்துத் தொலை என்றார். அவ்வளவுதான் உடனே அந்தத் துறவி திரும்பி நேராக நின்றார். அக்கா கோபப்படாதே நான் ஒழுங்காக சாகின்றேன். எப்படிச் செத்தால் என்ன? எல்லாம் எனக்கு ஒன்றுதான் என்று சொல்லிவிட்டு தரையில் படுத்து உயிரை விட்டார். அதற்குப் பின்பு அந்த அம்மா கோலை கையில் எடுத்துக் கொண்டு திரும்பிக் கூட பார்க்காமல் போய்விட்டாராம். மரணத்தை ஒரு விளையாட்டாக ஆக்கிய அந்தத் துறவிக்கு வாழ்க்கையே ஒரு விளையாட்டாகத்தான் இருந்திருக்கிறது. எந்த நோக்கமும் இல்லாமல் செயற்படுவது என்றால் என்ன... என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கு. பயனை எதிர்பாராமல் பணி செய்து வாழ்ந்து மறைந்த மகான் அவர்.

தம்முடைய தொழிலை விளையாட்டுப் போல செய்யத் தெரிந்தவருக்கு வாழ்க்கையே ஒரு விளையாட்டாக மாறிவிடும். எல்லாமே விளையாட்டாகி விடுகிறபோது மரணமும் விளையாட்டாகி விடும்.

ஆனால் அதற்கு முன்னர் உங்களுக்குள்ளே இருக்கிற உண்மையான நடிகனை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். நீங்கள் நடிக்க வேண்டியதே இல்லை. நீங்கள் ஏற்கனவே நடித்துக் கொண்டு தான் இருக்கின்றீர்கள்.

நீங்கள் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் அவ்வளவுதான் என்கின்றார் ஓஷோ. நீங்கள் தெருவிலே நடந்து போய்க் கொண்டிருக்கின்றீர்கள்.. .எதிரிலே வருகின்றவர் உங்களைப் பார்த்து...எப்படி இருக்கின்றீர்கள்? என்று கேட்கின்றார். நல்லா இருக்கேன் என்கின்றீர்கள். உண்மையில் நாம் நன்றாக இருக்க மாட்டோம். ஆனால் அப்படிச் சொல்வோம். அது நடிப்புத்தானே.

உங்களை சந்தித்ததாலே மிகவும் மகிழ்ச்சி என்கின்றோம். உடனே கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள்... உண்மையில் உங்கள் மனது மகிழ்ச்சியடைந்து விடுகின்றதா? அது நடிப்புத்தானே.

வாழ்க்கையை சரியாகப் புரிந்து கொண்டால் எல்லாமே நடிப்பு என்பதும் புரியும். கல்யாணப் பத்திரிகை அனுப்பியிருந்தேனே ஏன்டா வரவில்லை? என்று கேட்டான் ஒருவன். வந்திருந்தேனே என்றான் இவன். டேய் ஏன்டா பொய் சொல்கின்றாய்... நான் பத்திரிகையே உனக்கு அனுப்பவில்லையே என்றான் அவன்.

அதற்கு இவன், பத்திரிகை அனுப்பினேன் என்று நீ பொய் சொல்கின்ற பொழுது கல்யாணத்திற்கு வந்தேன் என்று நான் பொய் சொல்லக் கூடாதா? என்றான்.




# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 32 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



“இந்த வைபவத்தை நேரடியாக வானம்பாடி ஒளிபரப்பு மூலம் நேரடி அஞ்சல் செய்வதற்கு கொழும்பிலிருந்து வந்திருந்த அறிவிப்பாளர் இங்கே ஆசியுரை வழங்க யாழ். ஆயர். தோமஸ் செல்வநாயகம் வந்திருக்கின்றார். நல்லை ஆதீன முதல்வர் வந்திருக்கிறார் என்றெல்லாம் வர்ணனை செய்தார். கிறிஸ்தவ மதத் தலைவர் ஒருவரை திரு திரு என அழைக்கக்கூடாது என்பதை வர்ணனையாளர் அறிந்திருக்கவில்லை போல் தெரிகிறது.

மற்றையது நல்லை ஆதீன முதல்வர் அங்கு இல்லாத வேளையில் அவர் வந்திருக்கிறார் எனக் கூறியது வேடிக்கையானது. தற்காலிக நூலக மண்டபத்தில் கூட்டினால் 500 பேர் கூட இல்லை. சிறிய மண்டபத்தில் நடக்கும் நிகழ்வுகள் கூட நேரடியாகப் பார்த்து வர்ணனை செய்யக் கூட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளர் இல்லையா கேட்கத் தோன்றுகின்றது” என்று அப்பத்திரிகையில் கூறப்பட்டிருந்தது.

நூலகத் திறப்பு விழா 14.01.1998




பிரித்தானிய உயர்ஸ்தானிகர் நூலக பெயர் பலகையை திரை நீக்கம் செய்தல்

நூலகத் திறப்பு விழா 14-01-1998



திரு ரிச்சட் பத்திரான தேசியக் கொடியையும் திரு மங்கள சமரவீர மாநகர சபைக் கொடியையும் ஏற்றுகின்றனர்

### அக்கால கட்டத்தில் பொது நூலக கட்டடத்திற்கு நடந்தது என்ன?

யாழ்.பொது நூலகம் 1984 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்து நூலகம் முற்றாக திறக்கப்பட்ட போதும் போர்ச்சூழல் காரணமாக நூலகத்தை அக்கட்டடத்தில் தொடர்ந்து செயற்படுத்த முடியவில்லை. இதனால் யாழ்.நூலகத்தை நல்லூரில் அமைந்திருந்த இந்து விடுதி கட்டடத்துக்கு மாற்றும் தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுபற்றி தெளிவாக மேலே கூறப்பட்டது. ஆனால் நூலகக் கட்டடத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றி பத்திரிகைகளில் பெரிதாகச் செய்திகள் வந்ததாகத் தெரியவில்லை. நூல்களிலும் அது பற்றி பெரிதாகக் கூறப்பட்டிருக்கவில்லை.

12.5.1985 இல் வெளிவந்த ஈழ முரசில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. “யாழ்.நூலகத்தில் நள்ளிரவு குண்டு வெடித்தது. கட்டடம் ஆட்டம். கதவு, ஜன்னல்கள் சிதறின. யாழ்ப்பாண பொது நூலகத்தின் மீது நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் வீசப்பட்ட குண்டு வெடித்ததனால் நூலகத்தின் நடுப்பகுதியில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. நூலகத்தின் பல கதவுகள் உடைந்துள்ளன.

கண்ணாடிகள் நொருங்கியுள்ளன. நூலகக் கட்டடத்தில் பெரும் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான நூல்களும் கீழே சிதறிக் கிடந்தன. யுனைட்டட் கிளப் பக்கமாகவுள்ள நூலகக் கட்டடப் பகுதியே குண்டு வீச்சுக்கு இலக்கானது. யாழ். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் இதுபற்றி நேற்று பொலிஸில் புகார் செய்தார். கடந்த மாதம் பத்தாம் திகதி மாநகரசபை மண்டபம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. சரியாக ஒரு மாதத்தின் பின்னர் நேற்று அதிகாலை நூலகம் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டுள்ளது. நூலக ஊழியர்கள் அச்சம் காரணத்தால் வேலைக்குச் செல்ல மறுத்துள்ளனர்.” இவ்வாறு செய்தியில் கூறப்பட்டிருந்தது.

அதன்பின்னர் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நூலகக் கட்டடம் சம்பந்தமான செய்திகளை பத்திரிகையில் காண முடியவில்லை. ஆனால் 25.8.1986 இல் வெளி வந்த ஈழமுரசில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

“ யாழ்.நூலகமும் சேதம்! நகரம் நேற்றிரவு முழுவதும் இருளில். நேற்றுப் பிற்பகல் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட “ஷெல்” தாக்குதலினால் பழைய பொது நூலகக் கட்டடத்தில் பாரிய சேதமேற்பட்டுள்ளது. இந்த நூலகத்தின் அருகில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த நூலகக் கட்டடத்திலும் சேதமேற்பட்டுள்ளதாக அறியப் படுகின்றது.”

1984 இற்கு பின் நூலகக் கட்டடம் தாக்கப்பட்டது பற்றி சோமீதரனின் எரியும் நினைவுகள் ஆவணப்படத்தில் முன்னைய நூலகர் சுலோச்சனா இரகுநாதன் கருத்துத் தெரிவிக்கையில், 9.5.1985 இல் ரொக்கெட் லோஞ்சருடன் வந்த இளைஞரொவரால் யாழ்.கோட்டை தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொண்டபொழுது தான் மாநகர ஆணையாளர் சீ.வீ. கே. சிவஞானத்துடன் தொடர்பு கொண்டு நூலகத்தினுள் மாணவர்கள் படித்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களை வெளியேற்ற வேண்டுமெனவும் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆணையாளர் இராணுவ கொமாண்டருடன் தொடர்புகொண்டு விபரத்தைத் தெரிவித்த சமயத்தில் உடனடியாக அனைவரையும் அவ்விடத்தைவிட்டு வெளியேறும்படி கூறியதைத் தொடர்ந்து நூலகத்தினுள் இருந்த ஏறக்குறைய எண்பது பேர் வரையில் வெளியேறிய பொழுது நேரம் கிட்டத்தட்ட மாலை 4.30 மணியாக இருக்கும் எனவும் பின்னர் அன்று இரவு சுமார் ஒன்பது முப்பது மணி அளவில் பாரிய குண்டுச் சத்தம் நூலகப் பக்கமாக கேட்டதாகவும் தெரிவிக்கின்றார். தனது வீடு நூலகத்திற்கு கிட்ட இருந்ததால் அக்குண்டு வெடிப்புச் சத்தத்தை கேட்கக் கூடியதாக இருந்ததாவும் கூறியிருந்தார்.

நூலகக் கட்டடத்திற்கு ஏற்புட்ட சேதங்கள் பற்றி தங்க முகுந்தனால் எழுதப்பட்ட “யாழ்ப்பாண பொது சன நூலகம் - உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு” இல் மேற்கூறிய கருத்துக்கள் எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### எரியும் நினைவுகள் ஆவணப் படம் பற்றி.....

எரியும் நினைவுகள் யாழ்ப்பாணப் பொது நூலகம் அழிப்பைப் பற்றிய ஆவணப்படம் ஆகும். ஊடகவியலாளர் சி.சோமிதரன் சிரமங்களுக்கு மத்தியில் இதை ஆக்கியுள்ளார். இப் படம் 2008 ஜூனில் வெளியிடப்பட்டது.

இந்த ஆவணப்படத்திற்கான முழுமையான தரவுகளும், சாட்சியங்களும் சொந்த மண்ணில் இருந்தும், இலங்கைத் தலைநகரில் இருந்தும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேவேளை பிற் தயாரிப்பு முயற்சிகள் திரைத்துறைத் தொழில்நுட்பம் சிறப்பானதொரு இடத்தில் இருக்கும் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

யாழ்.நகரின் அன்றைய மேயர் ராஜா விஸ்வநாதன்1981 ஆம் ஆண்டு நூலக எரிப்பு நடந்த் பின்னர் வெளியிட்ட கருத்து வீடியோ, இந்த நூலக எரிப்பை முதலில் கண்ணுற்ற யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் மற்றும் தகைநிலைப் பேராசியர் சிவத்தம்பி போன்ற கல்வியாளர்கள், நூலகர்கள், நூலகத்து வாசகர்கள் என்று பலரின் நினைவுக் கதவுகளை இந்த ஆவணப்படம் திறந்திருக்கிறது.

நிகரி திரைப்பட வட்டம் சார்பில் தயாரிக்கப்பட்டு சி.சோமிதரனின் இயக்கத்திலும் தமிழகத்தின் தேர்ந்தெடுத்த திரைத் தொழில்நுட்பவியலாளர்களின் கூட்டிலும் இந்த் ஆவணப்படம் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளில் பேசும் வண்ணம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

(தொடரும்...)

# மூடப்படும் நிறுவனங்கள் இழப்பீடு பெற முடியும்

## நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகத் தற்போதைய நிலையால் நிறுவனம் ஒன்றை மூடுவதற்கு நேரிடுமானால் சேவையை முடிவுறுத்தல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் காரணமாகத் தற்போது 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கொவிட்-19 பரவல் காரணமாகப் பணிக்கு திரும்ப முடியாமல் வீடுகளில் உள்ளவர்களுக்கு அவர்களது வேதனத்தில் பாதியளவை செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்




## விரதங்கள்

### லட்சுமி அருள்தரும் ரத சப்தமி

(தொடர்ச்சி)

### 7 வாகனங்களில் பவனி வரும் ஏழுமலையான்



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ரதசப்தமி விழா விமரிசையாகக் கொண்டாடப்படும். இங்கு ஏழுமலைகள் இருப்பதால் ஏழு குதிரைகள் போல் நினைத்து இங்கு ரதசப்தமி கொண்டாடப்படுகிறது. திருமலையில் காலை 4.30 மணி முதல் 11.30 மணிவரை ஏழு வாகனங்களில் மலையப்பன் வலம் வருவார். பிரமோற்சவத்தின் போது ஏழுமலையான் தினமும் ஒவ்வொரு வாகனத்தில் தான் வலம் வருவார்.

ரத சப்தமியன்று ஒரே நேரத்தில் ஏழு வாகனங்களில் ஏழுமலையான் வலம் வருவது அர்த்தபிரமோற்சவம் என்பார்கள். வாயு புத்திரனான அனுமன் சூரியனிடம் இருந்தே கல்வி கற்றான் என்பது புராணம் கூறும் செய்தியாகும்.

### விரதம் இருக்கும் முறை

ரத சப்தமி அன்று சூரிய உதயத்தில் எழுந்து ஆறு, ஏரி அல்லது குளத்தில் நீராடச் செல்வது சிறப்பு. முடியாதவர்கள் வீட்டில் சூரிய ஒளிபடும் இடத்தில் நீராடலாம். ஏழு எருக்கம் இலைகள், மஞ்சள் பொடி கலந்த அட்சதையுடன் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் தலைக்கு மேலே வைத்துக் கொண்டு நீராட வேண்டும். ஏழு எருக்கம் இலைகளைக் கால்களில் இரண்டு, கைகளில் இரண்டு, தோள் பட்டைகளில் இரண்டு, தலையில் ஒன்று என வைத்து நீர் ஊற்ற வேண்டும்.

தலையில் வைக்கும் இலையில் பெண்கள் மஞ்சள் பொடி மற்றும் அட்சதையும் ஆண்கள் அட்சதை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் தரும். தந்தை இல்லாத ஆண்கள், கணவரை இழந்த பெண்கள் ஏழு எருக்கம் இலைகளுடன் பச்சரிசி, கறுப்பு எள் போன்றவற்றைத் தலையில் வைத்து நீராட வேண்டும்.

கணவனை இழந்தவர்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால் அடுத்து வரும் பிறவிகளில் இந்த நிலை வராது. ரத சப்தமி விரதத்தை சூரிய உதயத்தில் செய்ய வேண்டும்.

ரத சப்தமியன்று சுத்தமான இடத்தில் செம்மண்ணால் பூசி, அந்த இடத்தில் சூரிய ரதம் வரைய வேண்டும். அதில் சூரிய, சந்திரரை வரைந்து பவனி வருவதாக நினைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு சந்தனம், மஞ்சள், குங்குமம் இட்டு சிவப்பு நிறம் உட்படப் பல்வேறு வாசனை மலர்களால் அர்ச்சித்து சூரியநாராயணரை சூரிய துதிகளைச் சொல்லி வழிபட வேண்டும்.

அன்று சர்க்கரைப்பொங்கல், உழுந்து வடை செய்து இரண்டையும் நிவேதனம் செய்து வழிபட வேண்டும். கோதுமையால் செய்த சப்பாத்தி ரொட்டி, சாதம் போன்றவற்றை பசுமாட்டிற்குக் கொடுப்பது நல்ல பலனைத் தரும். வாசலில் சூரிய ஒளிபடும் இடத்தில் ரதம் வரைந்து அரிசி, பருப்பு, வெல்லம் படைக்கலாம். சூரிய உதயத்தின் போது குளித்து விரதம் அனுஷ்டித்தால் செல்வந்தர் ஆகலாம் என்கிறது புராணம்.

"ஓம் அஸ்வத் வஜாய வித்மஹே
பாச ஹஸ்தாய தீமஹீ
தன்னோ, சூரிய பிரசோதயாத்"

என்ற சூரிய காயத்தரி மந்திரத்தை 108 தடவை சொல்லலாம்.

ரதசப்தமியன்று தொடங்கும் தொழில் பணிகள் மிகவும் சிறப்பாக இருக்கும். இந்த நாளில் செய்யப்படும் தர்மம், தானத்திற்கு பல மடங்கு புண்ணியம் கிடைக்கும். சூரியன் நாம் வழங்கும் தானத்தை நம் முன்னோர்களிடம் வழங்குகிறார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மேலும் 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 4 மாவட்டங்களைச் சேர்ந்த 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் மஹரகம பொலிஸ் பிரிவில் பமுனுவ கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிலியந்தலை பொலிஸ் பிரிவில் ஹொன்னத்தர மற்றும் தல்தர ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் கிரிந்திவெல பொலிஸ் பிரிவில் குட்டிவில கிராம உத்தியோகத்தர் பிரிவு, இரத்தினப்புரி மாவட்டத்தில் எம்பிலிபிட்டிய பொலிஸ் பிரிவில் பல்லேகம, உடகம, புதிய நகரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பணாமுர பொலிஸ் பிரிவில் வலல்கொட, சுதுகல, பணாமுர ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் வேவல்வத்த பொலிஸ் பிரிவில் ரத்கம கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பன முடக்கப்பட்டுள்ளன.

மேலும், வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளம் பொலிஸ் பிரிவில் குருக்கள் புதுக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவும் முடக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## 'சுவசெரிய' அம்புலன்ஸ் சேவை நாளாந்தம் 5,300 அழைப்புகள்

(கொழும்பு)

1990 என்ற சுவசெரிய நோயாளர் காவு வண்டி சேவைக்கு நாளாந்தம் 5,300 இற்கும் மேற்பட்ட அழைப்புகள் கிடைக்கப் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆரம்ப சுகாதார சேவை, தொற்று நோய் மற்றும் கொவிட் நோய்த் தடுப்புக் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 297 சுவசெரிய நோயாளர் காவு வண்டி சேவைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 280 | 100 | 120 |
| தக்காளி | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 80 | 50 |
| கோவா | 130 | 120 | 120 |
| கரட் | 200 | 160 | 240 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 160 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 180 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 130 | 120 | 160 |
| பயற்றங்காய் | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 500 |
| போஞ்சி | 200 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 250 |
| வெங்காயப்பூ | -- | 180 | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 80 | 120 |

# தமிழ்க் கட்சி பிரதிநிதிகள்-சமல் சந்திப்பு பல்வேறு விடயம் தொடர்பில் ஆராய்வு



(நல்லூர்)

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் சமல் ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது பல்வேறு விடயங்களுக்கு அமைச்சர் சாதகமான பதில்களை வழங்கியுள்ளதுடன் அடுத்த கட்டமாக மீண்டும் ஒரு சந்திப்பை நடத்துவதற்கும் இணக்கம் தெரிவித்தார்.


கல்முனை பிரதேச செயலகத்தை தரமிறக்கும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் இணக்கம் தெரிவித்தார்.

அத்துடன் முல்லை கரைதுறைப்பற்றில் 8 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளதும் காணி நிர்வாகத்தினை மகாவலி அதிகார சபை பொறுப்பேற்பதனை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ பணித்துள்ளார்.

இது தொடர்பில் குழு அமைத்து ஆராயும் வரை எந்த நடவடிக்கையும் மேலதிகமாக நடைபெறாதெனவும் அவர் தெரிவித்தார்.(5-4-33)



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்றுப் புதன்கிழமை மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் பெறுமதியான நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- ரவிசாந்)



உரும்பிராய் மேற்கு உதவும் நண்பர்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் உரும்பிராய் செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த 33 மாணவ - மாணவியர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் பாலசுந்தரம் கிருபாகரன் இதற்கான நிதிப்பங்களிப்பை வழங்கியிருந்தார்.
(படம்:- ரவிசாந்)

# சுயதனிமைப்படுத்தப்பட்ட 24 பேருக்கு பி.சி.ஆர்.

(மன்னார்)

இரணைதீவில் சுய தனிமைப்படுத்தப்பட்ட சுமார் 24 பேருக்கு நேற்று புதன்கிழமை பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரீ.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


இந்தியாவில் இருந்து தலைமன்னார் பகுதிக்கு சட்டவிரோதமான முறையில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் வருகை தந்த நிலையில் கைது செய்யப்பட்ட 2 நபர்களும் அவர்களை அழைத்து வந்தவர்கள் என 3 நபர்களுக்கும் தனிமைப்படுத்தப்பட்ட இரணைதீவுப் பகுதியில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து வருகை தந்தவர்களில் ஒருவர் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய 3 நபர்களுக்கும் நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கடற்படையினர் மற்றும் பொலிஸார் உட்பட குறித்த 21 பேருக்கும் இவர்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இரணைதீவுப் பகுதியில் குறித்த பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார், நானாட்டான் பகுதிகளில் சுமார் 416 பி.சி.ஆர்.மாதிரிகள் கொழும்பிற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (5-4-285)

# ரத்ன சூத்திர பாராயணமும் விசேட பூஜைகளும்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இந்திய தேசம் கொடூர கொரோனாத் தொற்று நோயிலிருந்து மீண்டெழவும் மீண்டும் புத்துணர்ச்சி பெறவும் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் நேற்று ரத்ன சூத்திர பாராயணமும் ஐம்பெரும் பூஜைகளும் இடம்பெற்றன.

உலகத்திற்கு தர்மத்தையும் அன்பையும் அகிம்சையையும் போதித்த பாரத தேசத்தில் தற்போது எழுந்துள்ள கொரோனா நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்காக இலங்கை அரசினதும் நாட்டு மக்களின் சார்பாக ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி தலைமையில் ரத்ன சூத்திர பாராயணமும் இந்துமத குருக்கள் தலைமையில் விசேட பூஜைகளும் இடம்பெற்றன.

20 பேர்மட்டும் குறித்த வழிபாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள். குறித்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், இந்து, பௌத்த மத குருமார் கலந்து கொண்டனர்.(5-4-33)

# பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கலாசாலைகளில் நடைபெற இருந்த இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி இப்பரீட்சை ஆரம்பமாக இருந்த நிலையில் நாட்டில் அதிகரித்து வரும் கொரோனாத் தாக்கம் காரணமாக சுகாதாரப் பகுதி வழங்கிய அறிவுறுத்தலை அடுத்து பரீட்சைத் திணைக்களம் பரீட்சையை பிற்போட்டுள்ளதாக அறிவித்துள்ளது.(5-4)

# ஆபத்தான கற்குவாரிகளின் அனுமதிப்பத்திரம் மீள்பரிசீலனை

(நெளுக்குளம்)

பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆபத்தான கற்குவாரிகளின் அனுமதிப்பத்திரங்களை மீளப் பெறுவதற்கான பரிசீலனை செய்ய வேண்டும் என வவுனியா தெற்கு பிரதேச சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தவிசாளர் த.யோகராஜா தெரிவித்தார்.

தவிசாளராக நேற்றைய தினம் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஊடகங்களிற்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், போட்டியின்றி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

எனது பதவிக்காலம் குறுகிய காலமாகவிருந்தாலும் இந்தக் காலத்தில் செய்யப்பட வேண்டியவற்றைச் செய்வேன். சேதமடைந்துள்ள வீதிகளைச் சீரமைப்பதும் ஒளி ஊட்டுவதுமே எனது பிரதான இலக்காக இருக்கும்.

அத்துடன் ஏனைய கட்சிகளை சார்ந்த அனைத்து உறுப்பினர்களிற்கும் சமமான வேலைத்திட்டங்களை வழங்குவேன்.

அத்துடன் பிரச்சினைக்குரிய கற்குவாரிகளை பார்வையிட்டு மக்களுக்கு ஆபத்தான கற்குவாரிகளின் அனுமதிப்பத்திரங்களை மீளப்பெறுவதற்கான பரிசீலனை செய்வேன் எனவும் தெரிவித்தார். (5-4-299)

ஆயிரம் மைல்கள் நடந்தவனானாலும் அவன் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்துத்தான் அத்தனை மைல்களும் நடக்க முடிந்தது என்பதை மறந்து விடாதீர்கள். ~ சீனப் பழமொழி

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## மாணவன் சுந்தர்பவனின் கல்விச் சாதனை காண்மினே!

2020ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (04) வெளியாகின.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் போதெல்லாம் அதன் மீதான கவனயீர்ப்பு எம்மிடம் உச்சமாக இருக்கும்.

அந்தளவுக்கு கல்வி மீது நம் தமிழ் மக்கள் பற்றும் அளவற்ற கரிசனையும் கொண்டவர்கள்.

ஒரு காலத்தில் இலங்கைத் தீவில் தமிழ் மக்களோடு கல்வியில் போட்டியிட முடியாது என்ற முடிவுக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள், கோட்டா முறையை அமுல்படுத்தி எம் மாணவர்களின் திறமையை மழுங்கடித்தனர்.

இதனால் தமிழ் மாணவர்கள் பட்டப் படிப்பை மேற்கொள்கின்ற வாய்ப்புகளை இழந்து போயினர்.

பின்னாளில் இதன் விளைவுகள் என்னவாக மாறிற்று என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இராது.

யுத்தம், இழப்புகள், இடப்பெயர்வுகள், புலம்பெயர்வுகள் என்பவற்றால் எங்கள் பிள்ளைகள் ஊர் கடந்தும் தேசம் கடந்தும் போக, காலாகாலமாகக் கட்டிக் காத்த எங்கள் கல்விச் செல்வமும் எங்களை விட்டு மெல்ல மெல்லக் குறைவடைந்து, கல்விப் பஞ்சம் என்ற வறுமையை நம் தமிழினம் அனுபவிக்கலாயிற்று.

30 ஆண்டுகால யுத்தமும் படித்த மக்கள் சமூகத்தின் நகர்வும் எங்கள் கல்விப் புலத்தை கடுமையாகத் தாக்கிவிட, கல்வியில் கடும் பின்னடைவு என்ற துர்ப்பாக்கிய நிலைமைகளுக்கு நம் தமிழினம் ஆளாக வேண்டியதாயிற்று.

இருந்தும் 2020ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் கணிதப் பிரிவில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் மாணவன் தனராஜ் சுந்தர்பவன் அகில இலங்கையில் முதலிடம் பெற்று நம் தமிழ் மண்ணுக்குப் பெருமை தேடித் தந்தார் என்ற செய்தியை அறிந்த போது ஆனந்தக் கண்ணீர் எம் கன்னங்களின் ஓரங்களை நனைத்துக் கொண்டது.

மாணவன் சுந்தர்பவன் படைத்த சாதனை எங்கள் தமிழ் மக்களின் கல்வியின் பழம் பெருமையை எடுத்துக் காட்டுகிறது.

இஃது எம் கல்வியின் மீள் எழுச்சியின் ஒளியேற்றம்.

ஆம், கொரோனாத் தொற்றின் காரணமாக நாடு முடங்கிய போதிலும் கல்வியை நாம் ஒருபோதும் கைவிடோம் என்பதை இத்தேசத்துக்கு எடுத்தியம்புகின்ற சங்க நாதம்.

கிராமத்து கல்வியின் வலிமையை – ஆளுமையை – ஆற்றலை உயர்த்திக் காட்டுகின்ற வெற்றிக் கம்பம்.

மாணவன் சுந்தர்பவனின் சாதனை எங்கள் தமிழ் மாணவர்களுக்கான ஊக்க மருந்து.

இதே சாதனைகள் தொடர வேண்டும் என்பதுதான் நம் வேணவா.

இதற்கு மேலாக, 2020ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சாதனைப் பெறுபேறுகள் பெற்ற அத்தனை மாணவர்களுக்கும் அவர்களை ஆளாக்கிய அத்தனை அர்ப்பணிப்புடைய உள்ளங்களுக்கும் தமிழினம் என்றும் தனது வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

## பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி கோட்டா நேற்று பிரசன்னம்

(கொழும்பு)

கோவிட்-19 பரவல் தொடர்பில், நேற்று இரண்டாவது நாளாகவும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றில் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று முற்பகல் சபைக்கு பிரசன்னமாகியிருந்தார்.

புதிய பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வில் உரையாற்றியதன் பின்னர், ஜனாதிபதி சபைக்கு பிரசன்னமான 5 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நேற்றைய சபை விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் உதயகுமார், செல்வராசா கஜேந்திரன், மற்றும் தவராசா கலையரசன் ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

(ம-03)

## சுகாதார விதி மீறல்; 14 பேருக்கு எதிராக வழக்கு

(கரணவாய்)

நெல்லியடி பகுதியில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமல் முகக் கவசம் அணியாமல் முகக் கவசத்தை சரியான முறையில் பயன்படுத்தாமல் நகரப் பகுதிக்கு வருகை தந்தவர்கள் என 14 பேருக்கு எதிராக நெல்லியடி பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனையடுத்து அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதியால் அபராதம் விதிக்கப்பட்டது. (5-4-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** பெரிய உளுக்குளம் தீவிரகம, துடாரிக்குளம், உளுக்குளம், உளுக்குளம் எஸ்.பி. குடியிருப்பு, வீரபுரம், அறவந்துலாவ, எல்லப்பர் மருதங்குளம், மறக்காறம்பளை- கணேசபுரம், சுமணங்குளம். சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-4)

## மதுபோதையில் சாரத்தியம்

(கரணவாய்)

மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு எதிராக நெல்லியடி பொலிஸாரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றத்தினால் 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் ஆறு மாதத்திற்கு வாகன அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்பட்டதுடன் ஒருமாதம் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (5-4-60)

## மந்திகை பொதுச்சந்தை மூடப்பட்டது

(கரணவாய்)

சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்டதன் காரணமாக மந்திகை பொதுச்சந்தை சுகாதாரப் பகுதியினரால் மூடப்பட்டுள்ளது.

கொரொனா விதிமுறைகளுக்கு அமைவாக சந்தைகள் இயங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் இச் சுகாதார முறைகளைப் பின்பற்றாத காரணத்தால் நேற்று புதன்கிழமை சுகாதாரப் பகுதியினரினால், சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் சந்தை மீளத் திறக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (5-4-60)

## தெரிவுக்குழுவில் ஆறு சிறுபான்மை பிரதிநிதிகள்

(கொழும்பு)


தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக, அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில், 15 பேர்கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரால்நேற்று சபையில் அறிவிக்கப்பட்ட இந்தக் குழுவில், சிறுபான்மை கட்சிகளைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் கபிர் ஹாஷிம் ஆகியோர் சிறுபான்மையின பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜி எல். பீரிஸ், பவித்ரா வன்னியாராச்சி, விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர குமார திஸாநாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார, மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோரும் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (நி-4)

## சத்திய தரிசனம்



### பணியே நிஜமான தியானம்

- அன்பு, அமைதி, உண்மை, சேவை இவையே தியானத்தின் அடையாளங்கள். பேச்சில் மட்டுமல்லாமல் அன்றாட வாழ்விலும் இவற்றை செயல்படுத்துங்கள்.
- காலத்திற்கு மனிதன் கட்டுப்பட்டே ஆக வேண்டும். நேர ஒழுங்கு மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்யுங்கள்.
- கடவுளையே லட்சியமாக சுவாசியுங்கள். அவருக்குள் ஆழ்ந்து விடுங்கள்.
- மௌனமாக கண்மூடி அமர்ந்திருப்பதல்ல தியானம். உணர்வால் கடவுளிடம் ஒன்றுவதே நிஜமான தியானம்.
- உங்கள் பணியை தியானம் போல் மனம் ஒன்றிச் செய்யுங்கள். அதுதான் உயர்ந்த தியானம்.
- முதலில் கடவுள், இரண்டாவது உலகம், கடைசியாக நான். இந்த வரிசையில்தான் நம் வாழ்வு அமைந்திருக்க வேண்டும்.
- வேண்டுவது அனைத்தையும் கடவுள் வழங்குவார். எனவே, சரியானதைக் கேட்பதில் எச்சரிக்கையாய் இருங்கள்.

# தெய்வீக அன்னை ஈஸ்வராம்பா



தர்மம் குறைந்து அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் பிரபஞ்ச சக்தி மனித உருவமெடுத்து, மீண்டும் சமநிலையை ஏற்படுத்துகின்றது. பிரபஞ்சசக்தி மனித உருவம் எடுப்பதையே அவதாரம் என்கின்றோம். இதற்காக ஓர் அன்னை தேர்ந்தெடுக்கப்பட்டு அவரின் கர்ப்பத்தில் உதித்து மனித உருவமாக வளர்ந்து மானிடர்களை மீண்டும் தர்ம வழியில் வழிநடத்த வைப்பதே அவதாரத்தின்நோக்கமாகும்.

இப்படியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அன்னைகளுள் கௌசல்யா, தேவகி, மாதா மேரியுடன் ஈஸ்வராம்பாவும் அடங்குவர். இவர் பகவான் சத்திய சாயி பாபாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். தெய்வீக அன்னைமார் குழந்தையின் தெய்வீகத்தை தெரிந்தும் பல துன்பங்களுக்கு ஆளாகியுள்ளார்கள்.

அன்னை ஈஸ்வராம்பா சத்திய சாயி பகவான் பிறந்து ஒன்பதாவது மாதத்தில் தலையைச் சுற்றி பிரகாசமான ஒளி இருப்பதைக் கண்ணுற்றார். ஆனாலும் குழந்தையின் தெய்வீகத்தை மறந்து பல இன்னல்களுக்கு ஆளாகி தெய்வீக நிலையை அடைந்தார். இவரின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிச் சிந்திப்போம்.

முதலில் சாதாரணமாக பிள்ளையைப் போல் ஆசைகள் ஒன்றும் இல்லாமல், தனக்கு இருப்பதையெல்லாம் ஏனையவர்களுக்கு அளித்துவிட்டு இருப்பதைக் கண்டு ஏக்கமடைந்தார். பலர் இச் சிறுவனை வந்து வணங்கியபோதெல்லாம் இவனுக்கு கண்ணூறு பட்டு விடுமோ என பயம்கொண்டார். ஒவ்வொருநாளும் இரவில் கண்ணூறு தாக்கத்திலிருந்து தப்பவைக்க அதற்கான வழிபாட்டை செய்வார்.

பாடசாலையில் சில அற்புதங்களை நிகழ்த்துவதைக் கேள்விப்பட்டு மிகவும் துயரமடைந்தார். சாதாரண பிள்ளையைப் போல படித்து அரசாங்க வேலையில் அமருவதையே விரும்பினார். அன்னை மிகவும் எளிமையானவர். படிப்பறிவு எதுவும் இல்லாதவர். ஆனால் தனது கடமையில் இருந்து ஒருபோதும் தவறியது இல்லை. பகவான் தனது ஒன்பதாவது வயதில் கிராமத்தில் சிலரைத் திருத்துவதற்காக கவிதைகள் இயற்றி ஏனைய பிள்ளைகளுடன் தெருவில் பாடிக்கொண்டு போகும்போது அன்னை மிகவும் அந்தரப்பட்டார். பெரியவர்கள் சிறுவனுக்கு ஏதாவது தீங்கு செய்து விடுவார்களோ என்ற பயம் இருந்தது.

11.03.1940ஆம் ஆண்டு தேள் கொட்டி மூர்ச்சை இழந்து இருந்தபோது ஏதோ பிசாசு பிடித்துவிட்டது என எண்ணி பிசாசு கலைப்பவனிடம் கொண்டுபோய் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட போதும் பெரிதும் துயரம் கொண்டார்.

பகவான் தனது தெய்வீகத்தை 14ஆவது வயதில் பிரகடனம் செய்து துறவறம் மேற்கொண்டபோது மிகவும் துயரப்பட்டார். தாயைப் பார்த்து, இதோ மாயை வந்து விட்டது என்று சொல்லி அவரினால் சாதம் ஊட்டப்பட்டதும் மாயை இத்துடன் போய் விட்டது எனக் கூறியபோது அன்னைக்கு தெய்வீகத்தை கிரகிக்கமுடியவில்லை. சத்திய சாயியின் தெய்வீகத்தை உணர்ந்தவர்கள் அவருடன் பஜனை பாடி வணங்கத்தொடங்க அன்னையாரும் பக்தர்களுடன் சேர்ந்து பாடத்தொடங்கினார். சாதாரண தாய் என்ற நிலையிலிருந்து பக்தை என்ற நிலைக்கு மாறினார்.

பக்தர்களிடம் "உங்கள் சுவாமி எப்படி இருக்கிறார்?, உணவு உண்டாரா?" என்று கேட்டு அறியவேண்டியதாயிற்று. பகவானும் இவரை "கிருக அம்மா" என்று அழைக்கத் தொடங்கினார். பகவான் அன்னையை தான் போகும் இடங்களுக்கு கூட்டிச் சென்று இயற்கையையும், ஆறு, சமுத்திரம், மலை, காடு போன்ற வனப்பு நிறைந்த இடங்களைக் காட்டி அவரின் மனதை விரிவுபடுத்தினார். மகனுக்கும் தனக்கும் உள்ள இடைவெளியைத் தாங்கமுடியாமல் பகவானிடம் "நான் உனக்கு சொந்தமில்லை என்றால், நான் யாருக்கு சொந்தம்?" என்ற விரக்தியுடன் கேட்டார். "உங்களுக்கே உலகமும் மனித குலமும் சொந்தம்" என்று கூறி பகவான் அன்னையின் மனதை விரிவுபடுத்தினார்.

பகவான் ஆபிரிக்காவிலுள்ள கென்யா, உகண்டா நாடுகளுக்கு செல்ல ஆயத்தமான போது, போகவேண்டாம் என்று கெஞ்சினார். பேராசியர் கஸ்தூரி அங்குள்ள மிருகங்கள் கடவுளுக்கு ஆபத்துவிளைவிக்காது என சொல்ல "அவர் கடவுள் என்று விலங்குகளுக்கு தெரியுமா?" என்று கேட்டார். மகனுக்கு எங்கே, எப்படி ஆபத்து நிகழ்ந்துவிடுமோ என்று எப்போதும் பீதியடைந்திருந்தார். இதுதான் தாயின்பிஞ்சு மனம்.

சுவாமியிடம் தேவையானதைக் கேட்க சந்தர்ப்பம் கிடைத்ததுடன் புட்டபர்த்தி மக்களுக்கு பாடசாலை, வைத்தியசாலை, குடிநீரும் அவசியம் கிடைக்கவேண்டும் என்பதையே கேட்டார். இவருக்கு எவ்வளவு பெருந்தன்மை! சுவாமியும் பல்கலைக்கழகம், கல்லூரிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், குடிநீர் எல்லாவற்றையும் குறையில்லாது அளித்தார். அன்னையின் சந்தோசம் மேலோங்கியது.

1972ஆம் ஆண்டு பிருந்தாவனம், பெங்களூரில் கோடைக்கால கருத்தரங்கு நடைபெற்றது. அன்னையும் மகள் வெங்கம்மாவும் பேர்த்தியும் சென்றார்கள். மே மாதம் 6ஆம் திகதி காலை சுவாமி குளியலறையிலிருந்து வெளியேறும் போது "சுவாமி! சுவாமி!" என்று அன்னை கூப்பிட்டார். சுவாமியும் "வருகிறேன் வருகிறேன்!" என்று சொல்லி அவரருகில் சென்று ஆசீர்வதித்து துளசிநீரும் வாயில் இட்டார். அன்னை அமைதியாக இறைபதம் எய்தினார். கடைசி நேரத்தில் சுவாமியை அழைத்தது அன்னையின் ஆன்மிக நாட்டத்தைக் குறிக்கிறது. சுவாமி அவரின் பிரேதத்தை புட்டபர்த்திக்கு அனுப்பி விட்டு பெங்களூரில் நடைபெற்ற கருத்தரங்கை முடித்துவிட்டே புட்டபர்த்தி சென்றார். அங்கு கணவரின் அருகிலேயே பிரேதம் புதைக்கப்பட்டது. இப்போது அங்கே அழகான சமாதி கட்டப்பட்டுள்ளது. சுவாமியும் தனது ஒவ்வொரு பிறந்த நாளிலும் முதலில் சமாதிக்குச் சென்று அங்கு வழிபாடு நடத்தியே செல்வார்.

இன்றைய தினத்தை ஈஸ்வராம்பா தினமாக பகவான் பிரகடனம் செய்திருக்கின்றார். இந்நாளில் தாயின் பெருமையையும் பிள்ளைகளின் நலத்தையும் பேணும் நாளாக நாம் கொண்டாட வேண்டும்.

**வைத்திய கலாநிதி இ. கணேசமூர்த்தி**

# டொலர்களுக்கு அடிபணிந்து இராணுவத்தை காட்டிக்கொடுக்கிறார்

## சரத் வீரசேகர- பொன்சேகா மோதல்



(கொழும்பு)

வெளிநாட்டு டொலர்களுக்கும் பணத்திற்கும் அடிபணிந்து இராணுவத்தை காட்டிக் கொடுக்கும் செயலை சரத் பொன்சேகா செய்து கொண்டிருப்பதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மிருசுவில் படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய் விடுதலை தொடர்பில் கடந்த கூட்டத்தொடரில் சரத் பொன்சேகா கடுமையாக சாடியிருந்தார்.

இதனைச் சுட்டிக்காட்டி பேசிய சரத் வீரசேகர, முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா வெளிநாட்டிலுள்ள புலம்பெயர் தமிழர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு எமது நாட்டு இராணுவ வீரர்களை காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இப்போது அவர் டொலர்களுக்காக வேலை செய்து கொண்டிருப்பதாகவும் சரத் வீரசேகர கடுமையாக சாடினார்.

அத்துடன் 11 ஆயிரம் விடுதலைப் புலிகளை புனர்வாழ்வளித்து விடுவித்த சந்தர்ப்பத்தில், குண்டுவெடிப்புக்களுடன் தொடர்புடைய நபர்களை விடுதலை செய்த போது எதிர்ப்பினை தெரிவிக்காத பொன்சேகா இராணுவத்தினரை காட்டிகொடுப்பதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.



இந்த நிலையில், இதற்கு பதிலளித்த பொன்சேகா, சரத் வீரசேகர கூறுவதை பார்த்தால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 11 ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களை கொலை செய்திருக்க வேண்டும் என்பதா? என்று கேள்வி எழுப்பினார். (நி-4)

## கிளிநொச்சியில்...

தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

37 வயதான அவர் வயோதிப தாயாருடன் வசித்து வந்துள்ளார். ஒரு வருடத்திற்கு முன் திருமணம் செய்த இவர் மனைவியை பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,350)

## யாழ்.பல்கலைக்...

மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவருக்கு நேற்று முன்தினம் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில் நேற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் கடமையாற்றும் விரிவுரையாளரே தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து அவருடைய குடும்பத்தாரையும் அவருடன் தொடர்பிலிருந்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## குடும்பஸ்தர்...

மந்தவர் அல்வாய் மேற்கைச் சேர்ந்த இராசையா தீபன்குமார் (வயது- 41) என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்திகை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த போது இவர் வலிப்பு வந்து விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அடுப்பில் இருந்த கறி அவரின் உடல் மீது ஊத்துண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் எரிகாயங்களுக்குள்ளான அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா மேற்கொண்டார். (ம-3,60)

## இலங்கையில்...

ணவர்.

குறித்த கர்ப்பிணிப் பெண் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

ராகமை - பட்டுவத்தை பகுதியைச் சேர்ந்த 45 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)

## சுகாதாரப்...

எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார பிரிவினரால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த வவுனியா நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,299)

## முகக் கவசம்...

பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு கடும் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

முகக்கவசம் அணியாதோர், சமூக இடைவெளியைப் பேணாதவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோவின் அறிவுறுத்தலில் சிறப்பு நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணம் மாநகரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 30 இற்கும் மேற்பட்டோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டனர். (ம-3,18,33,101)

## பொலிஸார்...

தாரத் திணைக்கள தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் கொடிகாமம் சந்தை வியாபாரிகள், பொலிஸார் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்குவதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,18,30)

## வவுனியாவில்...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3,250)

## யாழ்ப்பாணத்தில்...

ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேரும் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐந்து பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்.போதனா ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஐந்து பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த ஒருவர், தெல்லிப்பளை வைத்தியசாலையைச் சேர்ந்த இருவர், கோப்பாய் வைத்தியசாலையைச் சேர்ந்த இருவர், அச்சுவேலி வைத்தியசாலையைச் சேர்ந்த இருவர், யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த நால்வர், வவுனியா பொது வைத்தியசாலையைச் சேர்ந்த நால்வர், தர்மபுரம் வைத்தியசாலையைச் சேர்ந்த ஒருவர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த மூவர், யாழ்.பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஒருவர் (விரிவுரையாளர்) தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனைவிடவும் கிளிநொச்சி கொரோனா தடுப்பு வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## வீட்டில் திடீரென...

மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள சம்பவம் அமைந்துள்ளது.

மாலபே பிரதேசத்தில் இரு வீடுகளில் மூவர் திடீரென உயிரிழந்துள்ளனர். இதையடுத்து அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளுக்கு அமைய, அவர்கள் மூவருக்கும் கொரோனாவைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒரே வீட்டில் வசித்து வந்த கணவன், மனைவியும் மற்றும் அயல்வீட்டுப் பெண்ணொருவரும் அடங்குகின்றனர் என்று அப்பிரதேசத்துக்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-3)

## மாகா...

விதிக்கப்படும். அது மாகாணங்களுக்கிடையிலான பயண கட்டுப்பாடாக அமையும் என்றார்.

இதுவரையில் நாட்டின் 14 மாவட்டங்களில் 6 பொலிஸ் பிரிவுகளும் 98 கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## +1,939...

நாட்டில் ஒரே நாளில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

கடந்த 9 நாட்களாக நாட்டில் ஆயிரத்து 500 பேருக்கு மேல் கோவிட் - 19 நோய்த் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை ஒரு லட்சத்து 17ஆயிரத்து 529 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் நாளாந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை 720 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி -2021.05.05
சீட்டிழுப்பு இலக்கம் - 509
P 04 14 22 29

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 05.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2767
X 33 39 54 69

மஹஜன சம்பத
திகதி 2021/05/05
சீட்டிழுப்பு இலக்கம் 4472
G 5 2 8 4 2 4

மெகா பவர்
திகதி 05/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0829
Q 01 07 16 21 41

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1117
கும்பம் 1 0 8 6 2 7
01191

சீட்டிழுப்பு வாரம் 073
சீட்டிழுப்பு திகதி 05.05.2021
வெற்றி இலக்கங்கள் 03 39 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,868,520

அத கோடிபதி
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1268
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 05.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 132,944,637
வெற்றி இலக்கங்கள் 10 16 35 49 N

சனிதா
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3598
சீட்டிழுப்பு திகதி: 05.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,889,098
வெற்றி இலக்கங்கள் 22 26 45 69 Z

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 05.05.2021
வெற்றி வாரம் : 3149
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள் 01 28 48 59 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,461,677

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1442
சீட்டிழுப்பு திகதி 05/05/2021
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் M 14 25 27 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் 54,915,960/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1755
சீட்டிழுப்பு திகதி 05.05.2021
வெற்றி இலக்கங்கள் 27 39 62 64 J
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 25,037,980
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# சிறுபான்மை சமூகம் மீதான அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

பொது இடங்களில் முகத்தை முழுமையாக மூடும் வகையிலான ஆடைகளை அணிவதற்குத்தடை விதிக்கும்யோசனை எந்தவொரு அடிப்படையுமற்றது. எனவே இந்த யோசனையை இலங்கைப் பாராளுமன்றம் நிராகரிக்க வேண்டியது அவசியமாகும். அத்தோடு இலங்கைவாழ் சிறுபான்மையின சமூகத்தின் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கான நியாயங்களைத் தேடுவதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, முகத்தை மூடும் வகையிலான ஆடைகளை அணிவதற்குத் தடை விதிக்கும் வகையிலான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னரே அரசாங்கத்தின் பாரபட்சமான நடவடிக்கைகளினால் இலங்கை முஸ்லிம் சமூகத்தினர் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர். இந்த புதிய யோசனை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால், முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடைகளான நிகாப், புர்கா போன்றவை சட்டவிரோதமானவையாக்கப்படுவதுடன், அவர்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படுவதற்கு அது வழிவகுக்கும்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களின் பின்னர் இதேபோன்ற தற்காலிகத்தடையொன்று விதிக்கப்பட்டது. அதன் விளைவாக முகத்தை மூடாமல் தலையை மாத்திரம் மறைக்கும்வகையிலான ஹிஜாப் ஆடையை அணிந்த முஸ்லிம் பெண்கள் ஓரங்கட்டப்பட்டமை மற்றும் பாடசாலை, மருத்துவமனை, பல்கலைக்கழகம் போன்ற பொது இடங்களுக்குச் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை உள்ளடங்கலாக முஸ்லிம் பெண்கள் எதிர்கொண்ட பல்வேறு பாதிப்புக்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆவணப்படுத்தலொன்றைச் செய்திருந்தது. (ம-03)

TECHNA
Technical Institute
Smart thinking leads to innovate
Cargills Square அருகாமையில், யாழ்ப்பாணம்.

A/L தொழினுட்பப் பிரிவு

2023, 2022, 2021 பிரிவுகளுக்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன

பொறியியல் - S. மயூரதன் (மன்./முசலி மகா வித்தி.)
தொழில்நுட்பவியல் G.கேதீஸ் (யா/புனித பத்திரிசியார் கல்)
உயிர்முறைமைகள் - M. விஷ்ணுதேவன், (யா/ஸ்கந்தா)
தொழினுட்பவியல் K. ஜெயந்தன் (வவு/பூம்புகார் கண்ணகி வித்)
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் - S. சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்)
ICT - T. லவன் (B,Sc (Hons) in computer science)
விவசாய விஞ்ஞானம் - M. விஷ்ணுதேவன் (யா/ஸ்கந்தா)
K. ஜெயந்தன் (வவு/பூம்புகார் கண்ணகி வித்)
புவியியல் - S.P. கரன் (வட்டு. இந்துக் கல்லூரி)
கணிதம் - G.V. ஹரிகரன் B.Sc (R)

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக
ZOOM ONLINE CLASSES நடைபெறுகின்றன.

Day Class ஆரம்பம் :- 08.05.2021
zoom சனிக்கிழமை காலை 9.00

நேர அட்டவணை தொடர்பான விபரங்களை
அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (6800)

077 170 3549, 076 542 2960

ஹோட்டல் மனேஜ்மன்ட்
அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்




பயிற்சிக் காலத்தில்
ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna. (C-2112)

அன்னா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2060)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL (C-2059)

2021 A/L 2nd shy CHEMISTRY (1st shy also)
ZOOM CLASS க.சிவத்திரன் B.Sc (hons)

விரைவான மீட்டலுடன் PAST PAPER CLASS
PART I (1979 - 2020) , PART II (2011 - 2020)

| | | |
|---|---|---|
| Physical I, II | Mon, Tue, Wed, Thur | Daily 5.30 am - 7.00 am |
| Organic II | Fri, Sat, Sun | |
| Inorganic I, II | Sat, Sun | 7.30 am - 9.30 am |
| Calculations I, II | Sat | 10.00 am - 12.00 noon |
| Gases, Energetics I, II | Sun | 10.00 am - 12.00 noon |

- இவற்றில் முதலில் முடிவடையும் பகுதிகளில் இருந்து Organic I உம் Industrial & Environmental உம் நடைபெறும்.
- 2022 மாணவர்களும் விரும்பிய அலகுகளை கற்கலாம்.
- இலங்கையில் எங்கிருந்தும் பங்குபற்றலாம்.
- நேரடி வகுப்புகள் ஆரம்பிக்கப்படினும் இறுதிப்பரீட்சை வரை ZOOMஇலேயே இதே நேரப்படி நடைபெறும்.
- Model Exam & Discussion உம் உண்டு.

THEORY வகுப்புகள் ( ஆரம்பத்திலிருந்து )

Physical ⇨ Sat, Sun ( 12.45 pm - 3.45 pm )
Organic ⇨ Mon, Wed, Thur, Sat ( 7.30 pm - 9.00 pm )
Inorganic ⇨ Mon, Tue, Wed, Thur ( 12.30 pm - 2.00 pm )

2022 மாணவர்களும் விரும்பிய அலகுகளில் பங்குபற்றலாம்.
அனைத்தும் 08.05.2021 இலிருந்து ஆரம்பம். (6802)

NORMAL CALL 077 008 6416

TECHNO WORLD
தொழில்நுட்ப கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை.

இம்முறை தேசிய, மாவட்டரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் நான்காவது முறையாகவும் முன்னிலையில்

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
(BIO SYSTEMS TECHNOLOGY)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2AB | சத்தியாஜினி (முல்) | 01 | 2CS | சுலக்சன் (வவு) | 09 | C2S | கேதீசியா | 19 |
| 3B | மப்லா (வவு) | 01 | 2CS | தனுஷா | 10 | C2S | கோபிகன் | 19 |
| 2BC | தலக்சன் (யாழ்) | 01 | 2CS | கீர்த்தனா | 10 | B2C | கிறிஸ்றினா | 24 |
| ABC | விதுர்சன் (முல்) | 04 | 2BC | அரோன் | 11 | 3S | தாட்சாஜினி | 26 |
| ABC | சிவாநந்தினி | 04 | 3B | பாத்திமா | 12 | 2BC | விஜயதர்சன் | 27 |
| A2B | பிரியாங்கன் | 04 | C2S | சாந்தினி | 13 | 2BC | டிறேசிகா | 28 |
| 2AB | விதுர்சன் | 05 | A2B | கிறிஸ்தோபர் | 13 | 3C | அனுச்ஜினி | 35 |
| C2S | யதுர்சனா (முல்) | 05 | C2S | மாங்களேஸ்வரி | 14 | B2C | ராகவி | 37 |
| 3C | அனோஜா | 05 | 2CS | திலக்சி | 14 | B2C | மதுராங்கா | 36 |
| B2C | பிரசாலினி | 07 | B2C | மயூரன் | 16 | 3S | ஜெரோன் | 37 |
| ABC | ஜேயல் | 07 | 2BC | ஜிகிரிதா | 17 | 3C | பிரியாழினி | 38 |
| C2S | சாலினி (முல்) | 09 | B2C | டிலக்சனா | 19 | 3C | ஜோன்சன் | 45 |
| | | | | | | 3C | டக்சிதா | 47 |

பொறியியல் தொழில்நுட்பம்
(ENGINEERING TECHNOLOGY)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2AB | மதிவர்மன் (யாழ்) | 01 | 3C | கோபிகா (முல்) | 07 | 3S | ஹரிசாந் | 22 |
| A2B | தமிழ்மாறன் (கிளி) | 01 | A2B | சாதுஜன் | 08 | B2C | விதுசன் | 27 |
| 2AB | ஜெனந்தன் (யாழ்) | 02 | A2B | கஜந்தன் | 09 | 2BC | கோபிதன் | 28 |
| 2AB | கஜிராஜ் (யாழ்) | 03 | ABC | ஜெயந்தரன் | 10 | B2C | வினித் | 30 |
| B2C | கஜீபராஜ் | 03 | C2S | நிர்மலன் | 11 | B2C | ஜோசப் | 33 |
| B2C | விதுசன் (வவு) | 03 | 3B | திவ்யா | 13 | B2C | ஜெனோஜன் | 34 |
| 2CS | சிவரஞ்ஜன் (முல்) | 03 | C2S | பிருந்தாகரன் (முல்) | 15 | B2C | பிரணவன் | 39 |
| 3C | அகீல் | 04 | 2BC | கிருபதாஸ் | 16 | 2BS | கனேஜன் | 40 |
| 3C | அமீர் | 04 | B2S | கபிலன் | 17 | B2C | கரன்ராஜ் | 41 |
| 2AB | விதுர்சன் (முல்) | 05 | ABC | முகமட் அசீப் | 18 | 3S | நிக்சயா | 42 |
| A2B | அஜித் | 07 | 2BC | முகமட் சசன் | 22 | B2C | சஞ்சஜன் | 44 |
| | | | 3S | எழிலவன் | 21 | B2C | றொசான் | 45 |

புதிய பிரிவுகள் ஆரம்பம் - 08.05.2021
A/L 2021 DAY CLASSES A/L 2023
ZOOM CLASSESS
077 017 5346 (C-2111)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.